பக்கங்கள்:-24

காலை முரசு

## இன்றிரவுடன் பிரசாரம் முடிவு

வாக்கெடுப்புக்கு 48 மணி நேரத்துக்கு முன்னர் அதாவது இன்று மே மாதம் 3ஆம் திகதி நள்ளிரவு 12 மணிக்குப் பின்னர் உள்ளூர் அதிகார சபைகள் தேர்தலில் போட்டியிடுகின்ற கட்சிகள்,

06

முழக்கம்: 02 | வள்ளுவர் ஆண்டு 2057 | சித்திரை 21 | சனிக்கிழமை | 03.05.2025 | அதிர்வு 272





# நல்லை ஆதீன முதல்வரின் திருவுடல் தீயுடன் சங்கமம்!

(விரிவான செய்தி 2 ஆம் பக்கம்)

# வீட்டுக்கே உங்கள் வாக்கு!




## தமிழரசின் பதில் தலைவர் சி.வி.கே. வலியுறுத்து

(எஸ்.நிதர்ஷன்)

"இம்முறை உள்ளூராட்சி சபைத் தேர்தலில் தொடர்ந்தும் தமிழ்த் தேசிய நிலைப்பாட்டில் உள்ள ஒரேயொரு கட்சியான இலங்கைத் தமிழரசுக் கட்சியை வடக்கு, கிழக்கு மக்கள் ஆதரிக்க வேண்டும்."

- இவ்வாறு இலங்கைத் தமிழரசு கட்சியின் பதில் தலைவர் சி.வி.கே.சிவஞானம் வலியுறுத்தினார்.

06

# டக்ளஸைத் தாக்க முயன்றவர் பின்னர் நையப்புடைக்கப்பட்டு படுகாயமுற்றார்

(ந.லோகதயாளன்)

யாழ். ஊர்காவற்றுறையில் நேற்று மாலை தேர்தல் பிரசாரத்தில் ஈடுபட்ட முன்னாள் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா மீது தாக்குதல் மேற்கொள்ள முயன்றவர் பின்னர் நையப்புடைக்கப்பட்டார். படுகாயமடைந்த நிலையில் அவர் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

இந்தச் சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

ஊர்காவற்றுறை, கரம்பன் பகுதியில் தேர்தல் பரப்புரையில் ஈடுபட்ட முன்னாள் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா மீது அந்தப் பகுதிக்குச் சென்ற

06




சட்டத்தரணி மணிவண்ணன் யாழ்ப்பாணம் மேயராகப் பணியாற்றியவர்.

இந்த தடவையும் யாழ் மாநகர சபை தேர்தலில் காத்திரமான முன்னணி வேட்பாளராகக் கருதப்பட்டவர். ஆனால் துரதிர்ஷ்டவசமாக அவரது கட்சியின் வேட்பு மனு ஏற்றுக்கொள்ளப்படாமையால் அவரது அணி யாழ் மாநகர சபைக் களத்தில் இல்லை. அதனால் பார்த்திபன் போன்றோரின் காத்திரமான நேரடிப் பங்களிப்பை யாழ் மாநகர சபை இம்முறை இழக்கின்றது.

ஆயினும் மணிவண்ணனும், பார்த்திபனும், அவர்களது ஆதரவாளர்களும் இம்முறை யாழ். மாநகர சபைக்கான தேர்தல்களில் இலங்கைத் தமிழரசுக் கட்சியை ஆதரிப்பார்கள், அது பற்றி பகிரங்க அறிவிப்பு வரும் என்று எதிர்பார்க்கப்பட்டது. ஆயினும் அத்தகைய அறிவிப்போ அல்லது அறிக்கையோ இன்னும் பகிரங்கமாகவில்லை. சில சமயங்களில் இன்று – கடைசி நேரத்தில் – அவர்கள் அறிவிக்க கூடும் என எதிர்பார்க்கப்படுகிறது.

06






# நல்லை ஆதீன முதல்வரின் திருவுடல் தீயுடன் சங்கமம்!

(எஸ்.நிதர்ஷன்)

பரிபூரணமடைந்த நல்லை திருஞான சம்பந்தர் ஆதீன குரு முதல்வர் – இரண்டாவது குருமகா சந்நிதானம் – ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகளின் திருவுடல் செம்மணி இந்து மயானத்தில் நேற்று வெள்ளிக்கிழமை மாலை தகனம் செய்யப்பட்டது.

கொழும்பில் சிகிச்சை பெற்றுக் கொண்டிருந்த நிலையிலேயே நேற்று முன்தினம் வியாழக்கிழமை இரவு அவர் பரிபூரணமடைந்தார்.

சுவாமிகளின் திருவுடல் நேற்று வெள்ளிக்கிழமை யாழ். நல்லை ஆதீனத்துக்குக் கொண்டுவரப்பட்டு பூரணத்துவ சாந்தி நிகழ்வுகள் இடம்பெற்றன.

அதனைத் தொடர்ந்து மாலை அஞ்சலி உரைகள் நிகழ்த்தப்பட்டு திருவுடல் ஊர்வலமாகச் செம்மணி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்பட்டு தகனக்கிரியைகள் இடம்பெற்றன.



நல்லை திருஞானசம்பந்தர் ஆதீன குரு முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய பரிபூரணமடைந்த செய்தி சைவ மக்களை மட்டுமன்றி ஒட்டுமொத்த தமிழ் மக்களையும் துயரத்தில் ஆழ்த்தியுள்ளது என்று பலரும் இரங்கல் செய்தியில் குறிப்பிட்டுள்ளனர்.











# 8, 9 ஆம் திகதிகளில் நாடாளுமன்ற அமர்வு

நாடாளுமன்றம் எதிர்வரும் 8 மற்றும் 9 ஆம் திகதிகளில் கூடவுள்ளது.

சபாநாயகரின் தலைமையில் நேற்று காலை நடைபெற்ற கட்சித்தலைவர்களின் கூட்டத்தில் இந்த தீர்மானம் எட்டப்பட்டுள்ளது.

சுங்க கட்டளைச்சட்டத்தின் கீழ் வாகனங்களை இறக்குமதி செய்வது தொடர்பில் வெளியிடப்பட்ட வர்த்தமானி தொடர்பில் எதிர்வரும் 8 ஆம் திகதி விவாதிக்கப்படவுள்ள அதேநேரம் எதிர்வரும் 9 ஆம் திகதி தனிநபர் பிரேரணை சபையில் முன்வைக்கப்படவுள்ளது.

இதேவேளை, குற்றச்செயல்களின் மூலம் ஈட்டப்பட்ட சொத்துக்களை மீள அறவிடுவதற்கான சட்டமூலம் எனப்படும் குற்றச்செயல்களின் வரும்படிகள் சட்டமூலத்தில் சபாநாயகர் ஜகத் விக்கிரமரத்ன கையொப்பமிட்டு சான்றுப்படுத்தினார்.

இந்த சட்டமூலம் வாக்கெடுப்பின்றி, திருத்தங்கள் இன்றி கடந்த மாதம் 8 ஆம் திகதி நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டது.

இந்த சட்டமூலம் 2025ஆம் ஆண்டின் 5ஆம் இலக்க குற்றச்செயல்களின் வரும்படிகள் சட்டமாக அமுலுக்கு வருகின்றது




# விடுதலை புலிகளிடமிருந்து கைப்பற்றப்பட்ட தங்கம் பதில் பொலிஸ் மா அதிபரிடம் கையளிப்பு





யுத்தம் நிலவிய காலப்பகுதியில் தமிழீழ விடுதலை புலிகள் அமைப்பினர் வசமிருந்து இராணுவத்தினால் கைப்பற்றப்பட்ட பொதுமக்களின் தங்கம் மற்றும் வெள்ளி பதில் பொலிஸ் மா அதிபரிடம் உத்தியோகபூர்வமாக கையளிக்கப்பட்டது.

பத்தரமுல்லை இராணுவ தலைமையகத்தில் இதற்கான நிகழ்வு நடைபெற்றது.

பதில் பொலிஸ் மாஅதிபரால் பொறுப்பேற்கப்பட்ட தங்கம் மற்றும் வெள்ளி என்பனவற்றின் பெறுமதி நீதிமன்ற உத்தரவின் பிரகாரம் இரத்தினக்கல் மற்றும் தங்காபரண அதிகார சபையூடாக மதிப்பிடப்பட்டதன் பின்னர் அவற்றை இலங்கை மத்திய வங்கியிடம் ஒப்படைக்க திட்டமிடப்பட்டுள்ளது.

இதேவேளை, அடையாளப்படுத்தப்படுத்தப்பட்டு உறுதிப்படுத்தப்படும் பொருள்களை பொதுமக்களிடம் ஒப்படைக்கத் தயாராக இருப்பதாக இலங்கை இராணுவம் தெரிவித்துள்ளது.


உள்ளூராட்சி மன்றத் தேர்தல் – 2025

இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின்
தலைவர் CVK சிவஞானம் தலைமையில்
பொதுச்செயலாளர் M.A சுமந்திரன் மற்றும் கட்சியின்
பாராளுமன்ற உறுப்பினர்கள், முன்னாள்
பாராளுமன்ற உறுப்பினர்கள், முன்னாள் மாகாணசபை
உறுப்பினர்கள் பங்கு பற்றும்

“மாபெரும் பொதுக்கூட்டம்”

இடம் : கிட்டு பூங்கா, நல்லூர்
காலம் : 03.05.2025
நேரம் : பி.ப 4.00 மணி

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

ஆச்சி, அப்பு ஆண்ட மண்ணை
அப்புக்காமிகள் ஆள்வதா?

நம் ஊர் தமிழரசோடு

இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி

# பல்கலைக்கழக கல்விசார் ஊழியர் வெற்றிடம் ஆட்சேர்ப்பு ஆரம்பம்

பல்கலைக்கழக கல்விசார் ஊழியர்களின் வெற்றிடங்களை நிரப்புவதற்காக ஆட்சேர்ப்பு ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக கல்வி, உயர்கல்வி மற்றும் தொழிற்கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது.

பல்கலைக்கழக மட்டத்தில் இதற்கான நடவடிக்கை முன்னெடுக்கப்படுவதாக பிரதியமைச்சர் மதுர செனெவிரத்ன தெரிவித்துள்ளார்.

சுமார் 2000 கல்விசார் ஊழியர்களுக்கான வெற்றிடங்கள் காணப்படுகின்றன என பல்கலைக்கழக பேராசிரியர்களின் தொழிற்சங்க சம்மேளனம் சுட்டிக்காட்டியுள்ளது.

முன்னுரிமையின் அடிப்படையில் இந்த வெற்றிடங்கள் நிரப்பப்படுமென பிரதியமைச்சர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.




## பாரியளவிலான மோசடி சம்பவங்கள் தொடர்பில் விரைவில் குற்றப்பத்திரிகை

### இலஞ்ச ஊழல் ஆணைக்குழு அறிவிப்பு

கடந்த காலத்தில் இடம்பெற்ற பாரியளவிலான 15 ஊழல் மற்றும் மோசடி சம்பவங்கள் தொடர்பில் விரைவில் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்படுமென இலஞ்சம் மற்றும் ஊழல் குற்றச்சாட்டுகளை விசாரணை செய்வதற்கான ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

விசாரணை செய்யப்படாத முறைப்பாடுகளில் காணப்பட்ட ஆவணங்களை ஆராய்ந்த பின்னர் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளின் அடிப்படையில் இந்த குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்படவுள்ளதாக ஆணைக்குழு குறிப்பிட்டுள்ளது.

குறித்த முறைப்பாடுகள் தொடர்பில் மிகவும் சிக்கலான விசாரணைகளை மேற்கொள்ள வேண்டியுள்ளதாக ஆணைக்குழு தெரிவித்தது.

கடந்த காலத்தில் இலஞ்ச, ஊழல் விசாரணை ஆணைக்குழுவிற்கு கிடைக்கப்பெற்ற முறைப்பாடுகளில் 300 முறைப்பாடுகள் தொடர்பான விசாரணைகள் தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

கடந்த ஆட்சிக் காலத்தில் இருந்த அமைச்சர்கள் மற்றும் அவர்களது அரசியல் நண்பர்கள் பலர் இந்த ஊழல் குற்றச்சாட்டுகளுடன் தொடர்புபட்டுள்ளதாக இலஞ்சம் மற்றும் ஊழல் குற்றச்சாட்டுகளை விசாரணை செய்வதற்கான ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

## டான் பிரியசாத் கொலை: சந்தேகநபர் ஒருவர் கைது




டான் பிரியசாத் கொலையுடன் தொடர்புடையவர் என சந்தேகிக்கப்படும் துப்பாக்கிதாரி கைது செய்யப்பட்டுள்ளார்.

கொழும்பு – கறுவா தோட்டத்தில் வைத்து மேற்படி நபரை கைது செய்துள்ளார் என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.



## இரகசியம் பரகசியம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)

ஆயினும் அவர்களது அணி தமிழரசுக் கட்சியை யாழ். மாநகர சபையில் ஆதரிக்கும் என்று வெளியான செய்திகளை அவர்களது தரப்போ, கட்சியோ மறுக்கவில்லை. பகிரங்க அறிவிப்பு இல்லாமலேயே அவர்களது தரப்பு இலங்கைத் தமிழரசுக் கட்சியை ஆதரிக்கின்ற அதே சமயம், நல்லூர் பிரதேச சபை தேர்தலில் தமிழரசு கட்சியோடு போட்டியிட்டு தேர்தலில் பொருதினாலும், தேர்தலின் பின்னர் நல்லூரில் தமிழரசு மற்றும் மணிவண்ணனின் மான் அணி ஆகியன ஒன்றித்து நிர்வாகத்தை கைப்பற்ற நடவடிக்கை எடுக்கும் எனவும் தெரிகிறது.

இந்த எழுதப்படாத கூட்டினால் யாழ் மாநகர சபையில் தமிழரசும், நல்லூர் பிரதேச சபையில் தமிழரசு மற்றும் மான் சின்ன அணி ஆகிய இரண்டும் கூட்டாகவும் முன்னணியில் இருக்கின்றன என்று கூறப்படுகின்றது. தேர்தல் முடிவுகள் அதனை உறுதிப்படுத்தும் என எதிர்பார்க்கிறேன்.

\+ + +

'மூன்று கோமாளிகளும் ஒரு வைத்தியமும் போதும். இனியும் வேண்டாம்' என்ற சாரப்பட்ட வாசகத்துடன் யாழ்ப்பாணம் கல்விச் சமூகம் என்ற பெயரில் சில தினங்களுக்கு முன்னர் ஒரு சுவரொட்டி நகர் எங்கும் ஒட்டப்பட்டிருந்தது.

அந்த செய்தியைப் பார்த்தபோது எனக்கு அது 'டூ மச்' (Too much) போல பட்டது. ஆனால் நேற்று கொழும்பில் தொலைக்காட்சி நிறுவனம் ஒன்றின் அரசியல்வாதிகளின் வாதப் பிரதிவாத நிகழ்ச்சி ஒன்றை பார்த்த பின்னர், அந்த போஸ்டர் ஒன்றும் அப்படி பிழையாக எழுதப்பட்டதாக கருதுவது தவறு என்று தோன்றியது.

வடக்கில் சுமார் ஆறாயிரம் ஏக்கர் காணி அரசினால் கபளீகரம் செய்யப்படுவது பற்றிய செய்தி நேற்று முன்தினம் 'காலை முரசு' பத்திரிகையில் விலாவாரியாக வெளிவந்திருந்தது. அது தொடர்பான வர்த்தமானி அறிவித்தல், இலக்கம், திகதி போன்ற விவரங்கள் எல்லாம் குறிப்பிடப்பட்டிருந்தன. அதனை மேலும் தெளிவுபடுத்தி அன்று முற்பகல் நடந்த மே தினக்கூட்டத்தில் விவரமாக அரசுக்கு சவால் விடுத்து உரையாற்றியிருந்தார் சுமந்திரன்.

அன்று மாலையில் மேற்படி தொலைக்காட்சியின் அரசியல் விவாதத்தில் இது பற்றி கேட்கப்பட்ட போது அரசு தரப்பு எம்.பி. ஒருவர் "அத்தகைய வர்த்தமானி அறிவித்தல் ஒன்றை எமது அரசாங்கம் வெளியிட்டு இருப்பதாகக் கூறுவது சிரிப்பாக இருக்கின்றது. அவர்கள் என்னத்தை வைத்து அப்படி கூறுகின்றார்கள் என எனக்குத் தெரியவில்லை. இவ்வாறான பல போலியான தகவல்களை அவர்கள் வெளியிடுகின்றார்கள்!" – என்றெல்லாம் வாய்க்கு வந்தபடி அந்த எம்.பி. நீட்டி முழக்குகின்றார். வர்த்தமானிக்கும், வர்த்தகமானிக்கும் இடையில் அவருக்கு வித்தியாசம் கூடத் தெரியவில்லை. போதாக்குறைக்கு ஏழாலையில் யாழ்ப்பாணம் இருப்பதாக ஒரு போடு போட்டார். அந்த விவாத நிகழ்ச்சியைப் பார்த்த பின்னர் இத்தகையவர்களை கோமாளி என்று தெரிவித்து போஸ்டர் அடித்து ஒட்டியமை அப்படி ஒன்றும் தவறு இல்லை என்றுதான் எனக்குத் தோன்றியது....!

## இன்றிரவுடன்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)

குழுக்கள் மற்றும் வேட்பாளர்களின் தேர்தல் தொடர்பான அனைத்து பிரசார நடவடிக்கைகளும் நிறுத்தப்பட வேண்டும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இன்று 3 ஆம் திகதி நடைபெறும் இறுதி அரசியல் பிரசாரக் கூட்டங்களின் வீடியோ காட்சிகள் மற்றும் விவரங்களை நாளை 4 ஆம் திகதியன்று ஒவ்வொரு தொலைக்காட்சி மற்றும் வானொலி அலைவரிசையில் ஒரு பிரதான செய்தி அறிக்கையில் மாத்திரம் பிரசாரம் செய்ய முடியும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

நாளை 4 ஆம் திகதியன்று வெளியாகின்ற செய்தித்தாள்களில் அக்கூட்டங்களின் புகைப்படங்களையும் அறிக்கைகளையும் வெளியிட முடியும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

ஒவ்வொரு அலைவரிசையோடும் செய்தித்தாளோடும் இணைந்த சமூக ஊடகங்கள் மற்றும் ஏனைய அனைத்து சமூக ஊடக தளங்களின் நிர்வாகிகளுக்கும் இந்த நிபந்தனைகள் பொருந்தும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

---

## வீட்டுக்கே...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)

யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற தேர்தல் பிரசாரக் கூட்டம் ஒன்றில் உரையாற்றியபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் உரையாற்றுகையில்,

"அண்மைக் காலமாக சிலர் இலங்கைத் தமிழரசுக் கட்சியைக் குறிவைத்து விமர்சித்து வருவதை நாம் அவதானித்துக் கொண்டுதான் வருகின்றோம்.

எதிர்வரும் மே மாதம் 6ஆம்திகதி உள்ளூராட்சி மன்றங்களுக்கான தேர்தல் இடம்பெறுகின்றது.

இந்தத் தேர்தலில் தெற்கத்தேய சிங்கள ஏகாதிபத்திய கட்சிகள் வடக்கு, கிழக்கில் போட்டி போடுகின்றன.

இவ்வாறான தெற்கத்தேய இனவாத சிங்களக் கட்சிகளுக்கு மக்கள் வாக்களிக்கக் கூடாது என்று நான் ஏற்கனவே கூறியுள்ளேன்.

இனவாதக் கட்சியான தேசிய மக்கள் சக்திக்கும் தமிழர் தாயகத்தில் மக்கள் வாக்களிக்கக் கூடாது என்றும் ஆரம்பம் முதலே கூறிவந்தவன் நான்.

அத்துடன் சிங்களத் தேசிய கட்சிகளை முற்றுமுழுதாக நிராகரித்து தமிழ்த் தேசியக் கட்சிகளுக்கு மக்கள் வாக்களிக்க வேண்டும் என்றும் ஆரம்பம் முதல் நான் வலியுறுத்தி வந்துள்ளேன்.

அந்தவகையில் தமிழர் தாயகமான வடக்கு, கிழக்கில் 58 உள்ளூராட்சி மன்றங்களில் போட்டியிடும் தமிழ்த் தேசியக் கட்சியான இலங்கைத் தமிழரசுக் கட்சிக்கு மக்கள் வாக்களிக்க வேண்டும்.

தமிழ்த் தேசிய நிலைப்பாட்டை நாடாளுமன்றத் தேர்தல்களில் 1956 ஆம் ஆண்டு முதல் தொடர்ந்து தக்க வைத்து வரும் ஒரேயொரு கட்சி என்ற வகையிலும் இறுதியாக இடம்பெற்ற நாடாளுமன்றத் தேர்தலில் கூட தமிழ்த் தேசியத்தை ஆதரிக்கும் பத்து நாடாளுமன்ற உறுப்பினர்களில் எட்டுப் பேரைக் கொண்ட பெருமைக்குரிய ஒரேயொரு கட்சி என்ற வகையிலும் இந்தக் கோரிக்கையை நான் முன்வைக்கின்றேன்.

உள்ளூராட்சி சபைகளில் அனுபவம் மற்றும் அந்தத் துறைசார்ந்த அறிவுள்ளவர்கள் உறுப்பினர்களாக வரவேண்டும். அப்போதுதான் அந்தச் சபை வினைத்திறன் மிக்கதாக அமையும்.

அவ்வாறான தகைமையுள்ளவர்கள் உள்ள ஒரேயொரு கட்சியாக இலங்கைத் தமிழரசுக் கட்சியே உள்ளது.

உள்ளூராட்சி சபைத் தேர்தலில் அந்தந்தக் குடியிருப்பாளர்களுடன் அதே ஊரில் வாழ்ந்து அந்தப் பகுதி மக்களின் தேவைகளை நேரடியாக உணர்ந்தவர்களே உண்மையான உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்கள். அவ்வாறான உறுப்பினர்களே எமது இலங்கைத் தமிழரசுக் கட்சியில் வேட்பாளர்களாக உள்ளனர்.

மக்களின் நில உரிமை தொடர்பில் தொடர்ச்சியாக நாம் குரல் கொடுத்து வருகின்றோம்.

மயிலிட்டி பகுதியில் தனியார் காணியில் அமைக்கப்பட்ட விகாரை சட்டவிரோதமானது என நாம் வெளிப்படையாகக் கூறுகின்றோம்.

எனினும், தேசிய மக்கள் சக்தியின் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள் இவ்வாறு சட்டவிரோத விகாரை என்று கூறுவார்களா?

சிங்கள இனவாதக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்களாக விளங்கும் இவர்களால் தையிட்டி திஸ்ஸ விகாரை சட்டவிரோத விகாரை எனக் கூற முடியாது.

எனவே, இம்முறை உள்ளூராட்சி சபைத் தேர்தலில் தொடர்ந்தும் தமிழ்த் தேசிய நிலைப்பாட்டில் உள்ள ஒரேயொரு கட்சியான இலங்கைத் தமிழரசுக் கட்சியை வடக்கு, கிழக்கு மக்கள் ஆதரிக்க வேண்டும் எனக் கேட்டுக்கொள்கின்றேன்." – என்றார்.

---

## டக்ளஸைத்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி.)

முன்னாள் ஈ.பி.டி.பி. உறுப்பினர் ஒருவர் குழப்பம் விளைவிக்கும் வகையில் அவருடன் தர்க்கத்தில் ஈடுபட்டார்.

பலர் சமரசம் செய்ய முயன்றபோதும், அதனை ஏற்க மறுத்து, டக்ளஸ் தேவானந்தாவை நெருங்கித் தர்க்கத்தில் ஈடுபட்ட அவர், திடீரென டக்ளஸ் தேவானந்தா மீது தாக்க முற்பட்டார்.

இதனையடுத்துக் கூடியிருந்தவர்கள் அவரை அங்கிருந்து விரட்டினர்.

அந்தப் பகுதியில் பிரசார நடவடிக்கை நிறைவடைந்த பின்னர், அந்த நபரின் இல்லத்துக்கு வானில் சென்ற சிலர் அவரை நையப்புடைத்தனர்.

இதனால் படுகாயமடைந்த அவர் ஊர்காவற்றுறை வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு பின்னர் மேலதிக சிகிச்சைக்காக யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டார்.

இந்தச் சம்பவம் தொடர்பில் ஊர்காவற்றுறைப் பொலிஸார் மேலதிக விசாரணையில் ஈடுபட்டுள்ளனர்.



# பல்கலைக்கழக மாணவனின் மரணம் தொடர்பில் விசாரணை நடத்த மூவரடங்கிய குழு நியமனம்

சப்ரகமுவ பல்கலைக்கழகத்தில் இரண்டாம் ஆண்டு மாணவர் ஒருவர் உயிரை மாய்த்துக் கொண்ட சம்பவம் தொடர்பில் விசாரணை நடத்துவதற்காக மூவரடங்கிய விசாரணை குழு ஒன்று நியமிக்கப்பட்டுள்ளது.

அந்த பல்கலைக்கழகத்தின் பேராசிரியர் ஏ.ஏ.வை அமரசிங்க தலைமையில் மேற்படி விசாரணை குழு நியமிக்கப்பட்டுள்ளது.

மேற்படி மரணம் தொடர்பில் இதுவரை 16 மாணவர்களிடம் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

மரணம் குறித்து விசாரிப்பதற்காக கல்வி, உயர்கல்வி மற்றும் தொழிற்கல்வி அமைச்சினாலும் விசாரணை குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது.

புஸ்ஸல்லாவை பகுதியைச்சேர்ந்த 23 வயதுடைய மேற்படி மாணவன், சிரேஷ்ட மாணவர்களால் பகிடிவதைக்கு உள்ளாக்கப்பட்டதை அடுத்து ஏற்பட்ட மன அழுத்தம் காரணமாக தனது உயிரை மாய்த்துக் கொண்டார் என தெரிவிக்கப்படுகிறது.

# ஆட்பதிவுத் திணைக்களத்தின் சேவை 6, 7 ஆகிய திகதிகளில் நிறுத்தப்படும்




எதிர்வரும் 6 ஆம் மற்றும் 7 ஆம் திகதிகளில் ஆட்பதிவுத் திணைக்களத்தின் அனைத்து சேவைகளும் இடைநிறுத்தப்படும் என அந்த திணைக்களம் தெரிவித்துள்ளது.

உள்ளூராட்சி மன்றத் தேர்தல் காரணமாக இவ்வாறு அனைத்து சேவைகளும் இடைநிறுத்தப்படுகின்றன.


ஆட்பதிவுத் திணைக்களத்தின் அனைத்து அலுவலங்களிலும் சேவைகள் இடைநிறுத்தப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.

# மதுபானசாலைகளுக்கு 6 ஆம் திகதி பூட்டு

நாட்டில் உள்ள அனைத்து மதுபானசாலைகளும் எதிர்வரும் 6ஆம் திகதி மூடப்படும் என மதுவரித் திணைக்களம் அறிவித்துள்ளது.

இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபையுடன் இணைக்கப்பட்ட அனுமதிப் பத்திரம் கொண்டவற்றைத் தவிர, அனைத்து மதுபானசாலைகளையும் மூடுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

உள்ளூராட்சி மன்றத் தேர்தலின் காரணமாக மதுபானசாலைகளை மூடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக மதுவரித் திணைக்களம் குறிப்பிட்டுள்ளது.



# தமிழ்த் தேசியக் கட்சிகளுக்கு தமிழர்களே வாக்களியுங்கள்!

## வடக்கு - கிழக்கு வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோர் சங்கம் வேண்டுகோள்

(எஸ்.நிதர்ஷன்)

"தமிழ் மக்களின் இருப்புக்கும் நிரந்தர அரசியல் தீர்வுக்குமாகத் தமிழ்த் தேசியப் பற்றோடும் உணர்வோடும் பயணிக்கின்ற தமிழ்த் தேசியக் கட்சிகளுக்கு மட்டும் உங்களுடைய பெறுமதியான வாக்குகளை அளியுங்கள்."

– இவ்வாறு வடக்கு – கிழக்கு மாகாண வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோர் சங்கத்தினர், தமிழ் மக்களிடம் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

யாழ். ஊடக அமையத்தில் நேற்று வெள்ளிக்கிழமை யாழ்ப்பாணம், வவுனியா, முல்லைத்தீவு, மன்னார் மற்றும் கிளிநொச்சி ஆகிய மாவட்டங்களின் குறித்த சங்கப் பிரதிநிதிகள் ஊடக சந்திப்பை நடத்தியபோதே அவர்கள் இதனைக் கூறினர்.

அவர்கள் மேலும் தெரிவிக்கையில்,

"உள்ளூராட்சி என்பது எமக்கான அதிகாரங்களைக் கொண்ட ஒரு கட்டமைப்பு. இதை எமது தமிழ்த் தேசியத்தில் இருக்கும் ஒரு தரப்பினரே ஆளுகை செய்ய வேண்டும்.

தமிழ்த் தேசியத்தின் வலிமையை இம்முறை நடைபெறவுள்ள உள்ளூர் அதிகார சபைத் தேர்தலில் தமிழ் மக்கள் காண்பிக்க வேண்டும்.

தென்னிலங்கையின் கட்சிகளின் பிரதிநிதிகள், அவர்களால் இறக்கப்பட்டுள்ள சுயேச்சைக் குழுக்கள் போன்றவை எம்மை மீண்டும் ஏமாற்றவே முயல்கின்றன. இவர்களை




இனியும் நம்ப முடியாது.

இதை விட வடக்கில் தென்னிலங்கைக் கட்சிகளின் நலன்களை நிலைநாட்ட எம்மில் சிலர் அக்கட்சிகளின் சார்பில் போட்டியிட்டு எமது இருப்பை இல்லாதொழிக்க முயல்வது வெட்கக்கேடான விடயமாகும்.

எனவே, தமிழ் மக்களின் இருப்புக்கும் நிரந்தர அரசியல் தீர்வுக்குமாகத் தமிழ்த் தேசியப் பற்றோடும் உணர்வோடும் பயணிக்கின்ற தமிழ்த் தேசியக் கட்சிகளுக்கு மட்டும் உங்களுடைய பெறுமதியான வாக்குகளை அளியுங்கள்."

– என்றனர்.

# மார்ச் மாதத்தில் ஏற்றுமதி வருமானம் அதிகரிப்பு



2025 ஆம் ஆண்டு மார்ச் மாதத்தில், ஏற்றுமதி வருமானம் அதிகரித்துள்ளதாக இலங்கை மத்திய வங்கி தெரிவித்துள்ளது.

மார்ச் மாதத்தில் ஏற்றுமதி மூலமாக 1,242 மில்லியன் அமெரிக்க டொலர் வருமானம் ஈட்டப்பட்டுள்ளது.

கடந்த வருடம் மார்ச் மாதத்துடன் ஒப்பிடுகையில் அது 8 சதவீத அதிகரிப்பாகும் என மத்திய வங்கி தெரிவித்துள்ளது.

சேவை ஏற்றுமதியில் 665 அமெரிக்க டொலர் கிடைத்துள்ளதுடன் 6.5 சதவீதம் அதிகரிப்படைந்துள்ளதாக குறிப்பிடப்படுகிறது. அந்த மாதத்தில் வர்த்தக பொருள்கள் ஏற்றுமதியில் 1,637 அமெரிக்க டொலர் கிடைக்கப்பெற்றுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

# மின்சார மோட்டார் சைக்கிள் இறக்குமதிக்கு விதிக்கப்பட்ட கட்டுப்பாடு நீக்கப்பட்டது

புத்தம் புதிய மின்சாரத்தில் இயங்கும் உந்துருளிகளை இறக்குமதி செய்வதற்கு இறக்குமதி மற்றும் ஏற்றுமதி கட்டுப்பாட்டு நாயகத்திடமிருந்து அனுமதி பெறப்பட வேண்டும் என்ற கட்டுப்பாட்டை நீக்கி வர்த்தமானி வெளியிடப்பட்டுள்ளது.

மேலும் சில வாகனங்கள் மீதான இறக்குமதி தடையை தளர்த்தி நிதியமைச்சு புதிய வர்த்தமானி அறிவிப்பு ஒன்றை வெளியிட்டுள்ளது.

ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவின் பணிப்பில் வெளியாகியுள்ள புதிய வர்த்தமானி அறிவித்தலின்படி, முன்னர் நிலவிய தடையின் காரணமாக துறைமுகங்களில் தேங்கியுள்ள வாகனங்களை விடுவிப்பதற்கு வழிசமைக்கப்பட்டுள்ளது.

கடந்த ஏப்ரல் 29 ஆம் திகதி முதல் அமுலுக்கு வரும்



வகையிலான இந்த வர்த்தமானியின் கீழ், வேறு நாடுகளில் பதிவு செய்யப்படாத புதிய மோட்டார் சைக்கிள்களை இறக்குமதி செய்ய அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்

259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com

## கருத்தாதிக்கச் சிறை

உலக ஊடக சுதந்திர தினம் இன்று. ஊடகம் என்பது ஒரு கருத்துருவாக்கிச் சாதனம். தீக்குச்சைக் கொண்டு விளக்கும் ஏற்றலாம். வீட்டையும் எரிக்கலாம். கருத்துருவாக்கியான ஊடகமும் ஒரு தீக்குச்சியே. அந்தத் தீக்குச்சியைக் கொண்டு நல்லவை, வலவையும் செய்யலாம். பேரழிவுகளையும் உண்டு பண்ணலாம்.

கருத்துருவாக்கக் கருவிகள் மூலம் என்ன நடக்கலாம் என்பதை மதியுரைஞர் அன்ரன் பாலசிங்கத்தின் கருத்தியலூடாக இன்று நோக்குவோம்.

கருத்துக்களைப் படைத்து, அந்தக் கருத்துக்களை வெகுஜன அரங்கில் பரப்பி, சமூகக் கருத்தோட்டத்தை கட்டி வளர்த்து, சமூக சிந்தனைப் போக்கை நெறிப்படுத்தி, சமூக கட்டுப்பாட்டை நிலைநாட்டுவதில் கருத்து உற்பத்தி நிறுவனங்களின் பங்கு முக்கியமானது. இன்றைய நவ யுகத்தில் ஊடகங்களே பிரதான கருத்து உற்பத்தி நிறுவனங்களாகக் கொள்ளப்படுகின்றன. மனிதர்கள் மீது கருத்தாதிக்கம் செலுத்தி, அவர்களைக் கட்டுப்பாட்டுடன் ஆளுவதற்கு கருத்து திணிப்பு அவசியம் என்பதால், உலகத்தில் உள்ள பல அரசுகளும் அதிகார வர்க்கங்களும் கருத்து உற்பத்தி நிறுவனங்களான ஊடகங்களை தமது அதிகார கட்டுப்பாட்டின் கீழ் வைத்திருக்கின்றன. கருத்துக்களை மக்கள் மீது திணித்து, மக்களின் விழிப்புணர்வை மழுங்கடித்து, மக்களின் மனவரங்குகளில் ஒரு பொய்யான - போலியான - சிந்தனை உலகை சிருஷ்டித்து, கருத்தாதிக்கம் மூலம் தமது ஆட்சியை வலுப்படுத்தி நிலைப்படுத்த முனைகின்றன. இந்த வகையில் கருத்துருவாக்கமானது மனிதர்கள் மீது ஆதிக்கம் செலுத்தும் ஓர் அடக்குமுறை வடிவமாகும்.

சமூக சிந்தனையுலகை மாற்றியமைக்கும் வகையில் கருத்துருவாக்கம் செய்வது ஒரு கலை. மிகவும் நுட்பமான ஒரு கலை. மெய்மையைத் திரிவுபடுத்தி, பொய்மையை மெய்மையாக காட்டும் ஒரு சூட்சுமமான கலை. படித்தவர்களும் சரி, பாமர மக்களும் சரி, இந்தக் கண்கட்டு வித்தையை இலகுவில் கண்டுகொள்ள முடியாது. இன்றைய உலகில் இந்த கருத்துருவாக்க கலை ஒரு பெரும் வர்த்தகமாக வளர்ந்து வருகின்றது.

சிந்தனைச் சுதந்திரம், எழுத்துச் சுதந்திரம், அடிப்படையான மனித சுதந்திரம், ஜனநாயக சுதந்திரம் என்ற ரீதியில் சுதந்திர விழுமியத்தின் உன்னதத்தை உலகத்துக்குப் போதித்து வரும் நாடுகள் இக்கருத்துருவாக்கத்தின் தோற்றப்பாட்டுக்கு அப்பால் - அந்தப் பொய்யான முகமூடிக்கு அப்பால் - காலம் காலமாக அநீதிகளைப் புரிந்து வருகின்றன.

கருத்து விலங்கிட்டு மனித மனங்களை சிறை கொள்வது ஒரு நுட்பமான அடக்குமுறை. உலகெங்கும் அடக்குமுறையாளர்கள் இந்த கருத்தாதிக்க யுக்தியைக் கடைப்பிடிக்கின்றார்கள். மனித அறிவை - மனங்களை - விழிப்புற விடாது, அவர்களை அறியாமை உறக்கத்தில் ஆழ்த்துவதற்கு ஏகாதிபத்தியவாதிகளும் சரி, பேரினவாதிகளும் சரி, இந்தக் கருத்து போதையையே பாவித்து வருகின்றனர். அடிமை கொண்ட மக்களின் கிளர்ச்சியை நசுக்க - புரட்சியை முறியடிக்க - விடுதலை உணர்வை கொன்றுவிட - கருத்தாதிக்கமானது ஒரு கனரக ஆயுதமாகப் பாவிக்கப் பட்டு வருகின்றது.

கருத்துலகமானது நமது சமூக வாழ்வை ஊடுருவி நிற்கின்றது. சமூக உறவுகளோடு பின்னிப்பிணைந்து நிற்கின்றது. நமது சிந்தனையையும் செயற்பாட்டையும் நிர்ணயித்து வருகிறது. தினசரி ஒவ்வொரு விடயத்திலும், மற்றவர்களது எண்ணங்களை, கருத்துக்களை, அபிப்பிராயங்களை, பார்வைகளை நாம் எதிர் கொண்டு வருகிறோம். அவற்றினால் ஆகர்ஷிக்கப்படுகின்றோம். எமது மனவரங்கில் தொடர்ச்சியாக, முடிவில்லாமக் கொட்டப்படும் எண்ணங்களின் இயல்புகளை, கருத்துக்களின் தன்மைகளை, பார்வைகளின் அந்தரங்க நோக்குகளை, நாம் விழிப்புணர்வுடன் விசாரணை செய்து பார்க்கத் தவறினால் கருத்தாதிக்கச் சிறையில் இருந்து நாம் விடுதலை பெறுவது சாத்தியமல்ல என்கிறார் மதியுரைஞர்.

எவ்வளவு உண்மையான கூற்று...!



## டில்லியில் கடும் கனமழை:

# வீடு ஒன்று இடிந்து விழுந்ததில் குழந்தைகள் உட்பட 4 பேர் பலி

டில்லில் நேற்று பலத்த காற்றுடன் கனமழை பெய்த நிலையில், வீடு ஒன்றின் சுவர் இடிந்து விழுந்தததில் தாய் மற்றும் மூன்று குழந்தைகள் உயிரிழந்தனர். கனமழை காரணமாக விமான சேவைகள் பாதிக்கப்பட்டன, வீதிகளில் தண்ணீர் தேங்கியதால் போக்குவரத்தும் பாதிக்கப்பட்டது.

நான்கு பேர் உயிரிழப்பு குறித்து டில்லி தீயணைப்புத் துறை அதிகாரி கூறுகையில்,

“நஜாஃப்கார்க்கில் உள்ள கர்காரி நஹார் கிராமத்தில் வீடு ஒன்று இடிந்து விழுந்துள்ளதாக காலை 5.25 மணிக்கு எங்களுக்கு ஒரு அழைப்பு வந்தது. மீட்பு பணிகளுக்காக பல குழுக்களை நாங்கள் அனுப்பி வைத்தோம். இடிபாடுகளில் இருந்து நான்கு பேர் மீட்கப்பட்டனர். அவர்களை அருகில் உள்ள மருத்துவமனைக்கு வேகமாக அழைத்துச் சென்றோம். அவர்களைப் பரிசோதித்த மருத்துவர்கள் நான்கு பேரும் ஏற்கெனவே உயிரிழந்து விட்டனர் என தெரிவித்தனர். இதுகுறித்து நாங்கள் பொலிஸாருக்கு தெரிவித்துள்ளோம்.” என்றார்.

டில்லியின் பல பகுதிகளில் மரங்கள் வேரோடு சாய்ந்திருப்பதையும், வீதியில் தேங்கிய நீரினால் மக்கள் சிக்கித் தவிப்பதையும் காட்டும் காணொலி வெளியாகி வருகின்றன. மின்டோ வீதியில் பாதியளவு மழைநீரில் மூழ்கிய கார் ஒன்றின் காணொலி சமூக வலைதளங்களில் வேகமாக பரவி வருகிறது.

மின்டோ வீதி, ஆர்.கே.புரத்தில் உள்ள மேஜர் சோம்நாத் மார்க் மற்றும் கான்புரி போன்ற பகுதிகள் மழையால் அதிகம் பாதிக்கப்பட்டுள்ளன. இதனிடையே முதல்வர் ரேணுகா குப்தா மற்றும் மூத்த அதிகாரிகள் சாலையில் நீர் தேங்கியிருப்பதை ஆய்வு செய்தனர். முதல்வர் கூறுகையில், “மோசமான வடிகால் வசதி மற்றும் சாலைகளால் நீர் தேங்கி நிற்கிறது” என்றார்.

மோசமான வானிலை காரணமாக விமான சேவை பாதிக்கப்பட்டுள்ளது என டில்லி விமான நிலையம் எக்ஸ் தளத்தில் தெரிவித்துள்ளது. 100 இற்கும் மேற்பட்ட விமானங்களின் புறப்பாடு, வருகை தாமதமடைந்துள்ளது மற்றும் 40 இற்கும் மேற்பட்ட விமானங்கள் திருப்பி விடப்பட்டுள்ளன. ஏர் இந்தியா மற்றும் இண்டிகோ உள்ளிட்ட விமான சேவை நிறுவனங்களும் இது குறித்து சமூக வலைதளத்தில் பதிவிட்டுள்ளன. டில்லி மட்டுமல்லாது சில வட மாநிலங்களிலும் மழை பதிவாகி உள்ளது.






# மணிப்பூர் கலவரத்தின் 2 ஆம் ஆண்டு நினைவு

## பாதுகாப்பு ஏற்பாடுகள் அதிகரிப்பு

கடந்த 2023 ஆம் ஆண்டு மே 3 ஆம் திகதி மணிப்பூரில் ஏற்பட்ட இனக்கலவரத்தின் இரண்டாம் ஆண்டு நிறைவை முன்னிட்டு முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக மணிப்பூர் முழுவதும் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளதாக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

சமூக விரோதிகளின் நடமாட்டத்தை கண்காணிக்க முக்கிய பகுதிகளான இம்பால், சுராசந்த்பூர் மற்றும் காங்கோக்பி மாவட்டங்களின் தலைநகரங்களில் பொலிஸார் தீவிர சோதனை மற்றும் வாகனச் சோதனைகளில் ஈடுபட்டுள்ளனர். மணிப்பூர் மக்கள் மாநாடு நடத்த திட்டமிட்டுள்ள இம்பாலின் குமான் லம்பாக் மற்றும் அதனைச் சுற்றியுள்ள பகுதிகளிலும் பாதுகாப்பு அதிகரிக்கப்பட்டுள்ளது.

இதுகுறித்து அதிகாரி ஒருவர் கூறுகையில், "மாநிலத்தில், அதிலும் குறிப்பாக சனிக்கிழமையன்று சமூக விரோதிகளால் அசம்பாவிதம் ஏதும் நடக்காமல் இருக்க முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது" என்றார்.

மைத்தேயி சமூக அமைப்பான, மணிப்பூர் ஒருமைப்பாட்டுக்கான ஒருங்கிணைப்புக் குழு, மே 3 ஆம் திகதியான இன்று அனைத்து வேலைகளையும் நிறுத்திவைத்து விட்டு மாநாட்டில் கலந்து கொள்ளுமாறு மக்களுக்கு அழைப்பு விடுத்துள்ளது.

குகி மாணவர்கள் அமைப்பு மற்றும் சோமி மாணவர்கள் கூட்டமைப்பு ஆகியவை குகி இனமக்கள் அதிகம் வசிக்கும் பகுதிகளில் மே 3 ஆம் திகதி முழு அடைப்புக்கு அழைப்பு விடுத்துள்ளன. இரண்டு மாணவர் அமைப்புகளும் கூட்டாக வெளியிட்டுள்ள அறிக்கையில், மே 3 ஆம் திகதியான இன்று மாநிலத்தில் இனக்கலவரம் வெடித்து இரண்டு ஆண்டு நிறைவடைகிறது. அன்று மக்கள் அனைத்து கல்வி மற்றும் வணிக நிறுவனங்களையும் மூடி அமைதி காக்க வேண்டும் என்றும் வலியுறுத்தியுள்ளன. மேலும், அன்று மக்கள் துக்கத்தை வெளிப்படுத்தும் விதமாக வீடுகளில் கருப்புக்கொடி ஏற்றுமாறும் கேட்டுக்கொண்டுள்ளது.

முன்னதாக கடந்த 2023 ஆம் ஆண்டு மே 3 ஆம் திகதி மணிப்பூரில் குகி பழங்குடிகளுக்கும் மைத்தேயி மக்களுக்கும் இடையே மோதல் வெடித்து இனக்கலவரமாக மாறியது. இந்தக் கலவரத்தில் சுமார் 260 இற்கும் அதிகமானோர் கொல்லப்பட்டனர். ஆயிரக்கணக்கானோர் வீடிழந்து, இடம்பெயர்ந்தனர்.







# சிலி, ஆர்ஜன்டீனாவில் சக்திவாய்ந்த நிலநடுக்கம்

## சுனாமி எச்சரிக்கை

சிலி மற்றும் ஆர்ஜென்டீனாவின் தெற்கு கடற்கரைப் பகுதிகளில் நேற்று மாலை 7.4 ரிச்டர் அளவிலான சக்தி வாய்ந்த நிலநடுக்கம் ஏற்பட்டுள்ளதாக அமெரிக்க புவியி யல் ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

இதனையடுத்து அங்கு சுனாமி எச்சரிக்கை விடுக்கப் பட்டுள்ளது.

கேப் ஹார்ன் மற்றும் அந்தாட்டிக்காவிற்கு இடையில் 10 கிலோமீற்றர் ஆழத்தில் இந்த நிலநடுக்கம் ஏற்பட்டுள் ளது.

இதுகுறித்து சிலி அதிகாரிகள் நாட்டின் தெற்குப் பகுதிக்கு சுனாமி எச்சரிக்கையையும் விடுத்துள்ளனர்.

சிலியின் தெற்கு முனையில் உள்ள மாகல்லன்ஸ் பகு தியின் கடலோரப் பகுதியில் வசிக்கும் மக்களை வெளி யேற்றும் பணியில் சிலியின் தேசிய பேரிடர் தடுப்பு மற்றும் மீட்புப் பணியினர் ஈடுபட்டுள்ளனர்.

நிலநடுக்கத்தால் உயிர்ச் சேதமோ அல்லது பொருள் சேதமோ எதுவும் ஏற்பட்டதாக இதுவரை செய்திகள் எதுவும் வெளியாகவில்லை.

# பதவி நீக்கம் செய்யப்பட்ட மைக் வோல்ட்ஸ் ஐ. நா.வுக்கான அமெரிக்கத் தூதராக நியமனம்



அமெரிக்காவின் தேசியப் பாதுகாப்பு ஆலோசகர் பதவியிலிருந்து மைக் வால்ட்ஸ் அமெரிக்க ஜனாதிபதி டொனா ல்ட் ட்ரம்பினால் நீக்கப்பட்டுள்ளார்.

அவர் ஐக்கிய நாடுகளுக்கான தூது வராக நியமிக்கப்படுகிறார் என டொனால்ட் ட்ரம்ப் அறிவித்துள்ளார்.

அவருக்குப் பதிலாக, அமெரிக்கா வின் இராஜாங்க செயலாளர் மார்க்கோ ரூபியோ, தற்காலிகமாக அமெரிக்க தேசியப் பாதுகாப்பு ஆலோசகராக செயற்படுவார் என்று தெரிவிக்கப்படுகி றது.

மைக் வால்ட்ஸ், அமெரிக்க இராணு வத் திட்டங்கள் குறித்துக் கலந்துரை யாடப்படுகின்ற தொடர்பாடல் குழு ஒன்றில், தவறுதலாக ஊடகவியலாளர் ஒருவரது இலக்கத்தையும் இணைத்த மையே அவரது பதவி நீக்கத்துக்கான காரணம் என்று கூறப்படுகிறது.

டொனால்ட் ட்ரம்ப் இரண்டாவது தடவையாக ஜனாதிபதியாகப் பதவி யேற்றதன் பின்னர் வெள்ளை மாளிகை யிலிருந்து வெளியேற்றப்படுகின்ற முதலாவது சிரேஷ்ட நிர்வாக அதி காரி மைக் வோல்ட்ஸ் என்பது குறிப் பிடத்தக்கது.




# டிக்டொக் நிறுவனத்திற்கு அபராதம் விதித்தது ஐரோப்பிய ஒன்றியம்

டிக்டொக் நிறுவனத்திற்கு 601 மில்லியன் அமெரிக்க டொலர் அபராதம் விதிக்கப்பட்டுள்ளதாக சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

ஐரோப்பிய ஒன்றியத்தின் தனிப்பட்ட தரவு பாதுகாப்பு விதிகளை மீறி சீனாவிற்கு தரவுகளை பரிமாற்றியதற்காக இந்த அபராதம் விதிக்கப்பட்டுள்ளது.

மேலும் ஆறு மாதங்களுக்குள் ஐரோப்பிய ஒன்றிய விதிகளுக்கு இணங்க அதன் தரவு செயலாக்கத்தை மாற்றியமைக்க வேண்டும் எனவும் உத்தரவிடப்பட்டுள்ளது.

# பாகிஸ்தானால் நட்டத்தை சந்திக்கும் நிலையில் இந்திய விமான சேவை




இந்திய விமானங்களுக்கு, தனது வான்வெளியைப் பயன்படுத்த பாகிஸ்தான் அரசாங்கம் அண்மையில் தடை விதித்ததால், இந்திய விமான சேவை நிறுவனத்துக்கு 600 மில்லியன் டொலர் நட்டம் ஏற்படவுள்ளது.

இதனை சுட்டிக்காட்டி இந்திய விமான சேவை நிறுவனம் இந்திய அரசாங்கத்துக்கு கடிதம் ஒன்றை அனுப்பி வைத்துள்ளது.

பஹல்காம் தாக்குதலை அடுத்து இந்தியா மற்றும் பாகிஸ்தானுக்கு இடையில் இராஜதந்திர முறுகல் ஏற்பட்டுள்ளது.

இதனால் இரண்டு நாடுகளும் பரஸ்பர கட்டுப்பாடுகளை அமுலாக்கி இருக்கின்றன.

இந்நிலையில் அண்மையில் இந்தியாவின் விமானங்கள் தனது வான்பரப்பைபயன்படுத்துவதற்குபாகிஸ்தான் தடை விதித்ததன் விளைவாக, இந்திய விமானங்கள் மாற்றுப் பாதைகளை பயன்படுத்த வேண்டியுள்ளது.

இதனால் அதிக எரிபொருள் செலவு, பயணிகளின் வருகை வீழ்ச்சி போன்றவை காரணமாக 600 மில்லியன் மேலதிக செலவு ஏற்படுவதாக கூறப்படுகிறது.

இந்த நிலைமை தொடரும் வரையில், தங்களுக்கு அரசாங்கம் நிவாரணம் வழங்க வேண்டும் என்று இந்திய விமான சேவை நிறுவனம் அரசாங்கத்தைக் கோரியுள்ளது.



இக்கட்டுரையாளர் செல்லத்துரை ரவீந்திரன் சிரேஷ்ட சட்டத்தரணி. ஆஸ்திரேலியாவைத் தளமாகக் கொண்டு இயங்கும் இலங்கை புலம்பெயர் சட்டவாளர்.

இலங்கையில் தமிழ் மக்களின் விடுதலைப் போராட்ட சரித்திரத்தின் ஆரம்பத்தில் - எண்பதுகள் வரை - தாயகத்தில் நின்று நம் இனத்துக்காகப் போராடிய புலமையாளர். விடுதலைப் போராட்டத்தின் ஆரம்பக் கட்டத்தில் தியாகி சிவகுமாரன், புலிகளின் தலைவர் பிரபாகரன் மற்றும் உமாமகேஸ்வரன், சுந்தரம் சிறிசபாரத்தினம், சித்தார்த்தன் முதல் டக்ளஸ் தேவானந்தா வரை மூத்த போராளித் தலைவர்கள் எல்லோரோடும் சட்டவாளராகவும், தமிழ் மக்களின் புனர்வாழ்வுப் பணிகளை ஒருங்கிணைக்கும் தொடர்பாளராகவும் நெருங்கிப் பழகியவர். தமிழர் புனர்வாழ்வுக் கழகம் மற்றும் தமிழர் தகவல் நிலையம் ஆகியவற்றின் பிதாமகர்களில் ஒருவர். இலங்கையில் தமிழர்களுக்கு எதிராக இழைக்கப்பட்ட கொடூரங்கள் குறித்து விசாரிக்க நியமிக்கப்பட்ட சன்சோனி கமிஷன் விசாரணைகளில் தமிழர் தரப்பு வாதங்களையும் சான்றுகளையும் ஒருங்கிணைத்து நெறிப்படுத்தும் அனுசரணை சட்டத்தரணியாகச் செயற்பட்டவர். தற்போதைய நிகழ்வுகள் தொடர்பான அவரது பார்வை அவரது அனுபவங்களிலிருந்து தமிழ் மக்களின் புரிதலுக்காக இங்கு தொடராக வெளிவருகிறது.

ஆஸ்திரேலியாவில் புலம்பெயர் தமிழர்களின் சட்டநலன்களில் அதிக ஈடுபாட்டுடன் செயற்பட்டு வரும் அவர் முன்னர் 'காலைக்கதிர்' நாளிதழின் வாசகர்களால் நன்கு அறியப்பட்ட அரசியல் கட்டுரையாளர் என்பது குறிப்பிடத்தக்கது.

13

# திசைகாட்டியின் திரிசங்கு நிலை; அந்தக் கட்சியின் கொள்கையா? அன்றி அரசியல் சந்தர்ப்பவாதமா?



பதிவுகளின் இன்றைய பாகத்தில் இதனை மேலெழுந்த விதத்தில் பொழிப்பாக குறிப்பது பொருத்தம் என்று எண்ணுகிறேன். தேர்தல் பிரசாரங்களில், தேசிய மக்கள் சக்தி தலைவர்களிடமிருந்து, மக்கள் – முக்கியமாகத் தமிழ் மக்கள் – தங்களை நம்ப வேண்டும், நம்பியவர்கள் கைவிடப்பட மாட்டார்கள் என்ற செய்தி வருகின்றது. அவர்களின் தேர்தல் முகவர்களோ, முதலில் நம்பினால்தானே, அந்த நம்பிக்கை வளர்ந்தால்தானே ஏதாவது பேசி பெற்றுக் கொள்ளலாம் என்று பக்கப்பாட்டுக்கள் பாடுகிறார்கள். ஆனால் வரலாற்றில் தேசிய மக்கள் சக்தியின் முன்னோடியும், அதனைக் கட்டுப்படுத்தும் தரப்புமான ஜே.வி.பியின் கொள்கைப் பிரகடனங்களில் அவர்களின் திரிசங்கு நிலைகளைப் புரிந்து கொண்டு இந்த நம்பிக்கை நாயனங்களை ஊதுபவர்களாகத் தெரியவில்லை.

1983இல் ஜே.வி.பி. தடை செய்யப்பட்டதும் அதன் தலைவர்கள், முக்கியமாக அவர்கள் தலைமறைவாக இருந்து வெளியிட்ட அறிக்கைகளின்படி தமிழ் மக்களுக்கு ஆதரவான நிலைப்பாட்டினை எடுத்தால் அரசியல் ரீதியாக அது தற்கொலையாக முடியும் என்ற முடிவினை எடுத்து, தமிழீழம் கேட்பவர்களை எதிர்த்தால் அதன் மூலம் பெருவாரியான சிங்கள மக்களைத் தம் பக்கம் இழுக்கலாம் என்ற கணக்கு எடுக்கப்பட்டது. ஆகவே தாங்கள் தடை செய்யப்பட்டமை, தாங்கள் தமிழர்களுக்கு எதிரானவர்கள் என்பதாலும், ஜே.ஆர். தமிழருக்கு நாட்டைப் பிரித்து கொடுத்து விடும் திட்டம் நிறைவேறாமல் போகும் என்பதாலும்தான் என்றார்கள்.

ஜே.வி.பியின் 1977 இன் கொள்கைப்படி சுயநிர்ணய உரிமையை ஏற்றுக்கொள்ள வேண்டும் எனவும், அதனை வெளிப்படையாக அறிவிக்காது அரசியல் செய்வோம் என்றவர்களும், தமிழ் மக்களுக்கு எதிரான அவர்களது உரிமைகளுக்கு சாதகமற்ற நிலையை எடுத்து, திரிசங்கு நிலையில் அவற்றை விளக்க முயன்றனர். இந்த நிலைப்பாட்டை மனதில் வைத்தே கடும் போக்காளர்கள் கட்சியின் அதிகாரத்தைக் கைப்பற்றி, மறைவிடங்களில் இருந்து தமிழர் விரோத மனப்பாங்கு கொண்டவர்களை இலகுவாக அங்கத்தினராகச் சேர்த்து, எல்லாப் பெரும்பான்மைக் கட்சிகளிடையேயும் தாங்கள்தான் தமிழீத்துக்கு விரோதமானவர்களாக இருக்கிறோம் என வளர்ச்சி தேடினார்கள்.

தேர்தல் மூலம் ஜனநாயக ரீதியில் அரசை பொறுப்பேற்கலாம் என்று 1982 ஆம் ஆண்டில் தேர்தலில் ஈடுபட்ட விஜயவீரவும், ஆதரவாளர்களும் 1984இல் அரசாங்கத்தை கைப்பற்ற ஆயுதப் போராட்டம் ஒன்று தேவையானது எனத் தீர்மானித்து அதற்காக அங்கத்தினர்களை பெருமளவில் சேர்த்து, அம்பாறை, சியம்பலாண்டு, சிங்கராஜா போன்ற காடுகளில் ஆயுதப் பயிற்சி அளித்தார்கள். அப்படியான ஆயுதப் பயிற்சிகளைப் பற்றி அரசாங்கத்திற்குத் துப்பு கிடைத்தால் அவர்கள் தாக்கப்படுவார்கள் எனத் தெரிந்து, தாங்கள் ஆயுதங்களை பாவித்துத் தாக்குவதற்கு இந்த அடக்குமுறைகளே காரணம் என்ற விளக்கங்களையும் தயாரித்துக் கொண்டார்கள். ஆனால் தமிழ் மக்களின் மேல் நடத்தப்பட்ட அடக்குமுறைகளின் தாக்கமே தமிழ் இளைஞர்கள் தங்கள் மக்களின் தற்பாதுகாப்புக்காக ஆயுதம் தாங்கினார்கள் என்பதை ஏற்றுக்கொள்ளத் தயாராகவில்லை. 28 மே 1984 உபதிஸ்ஸ கமநாயக்கா, இலங்கையில் அமெரிக்க தூதரகத்தின் ஒரு பகுதியில் இஸ்ரேலின் நலனுக்காக ஒரு பிரிவு

தொடர்ச்சி ▼

# திசைகாட்டியின் திரிசங்கு நிலை; அந்தக் கட்சியின் கொள்கையா? அன்றி அரசியல் சந்தர்ப்பவாதமா?

தொடர்ச்சி▲

இயங்குவதற்கு இலங்கை அரசினால் அனுமதி தரப்பட்டதை கண்டித்து அது தங்களை அழிக்கும் திட்டம் என்று புலம்பினார்.

1971 இல் அவர்களின் கொள்கை வெளியீட்டில் ஸ்டாலினிஸ (Stalinist) பாணியில் மொத்த அதிகாரங்களையும் கொண்ட ஒரு கட்சி அதிகாரத்துக்கான (Totalitarianism) வழிவகைகளை அதில் அமைத்தனர். தங்களது 1977 ஆம் ஆண்டு பிரகடனத்தில் பல கட்சிகளுக்கு இடம் அளித்தாலும், அடிப்படையில் ஏதோ ஒரு அதிகாரத்தைத்தான் அனுமதித்தனர். எவ்வளவுதான் வசீகரமாக பேசினாலும் ஜே.வி.பி. தங்களது அரசியல் எதிர்பார்ப்புகளோடு சமரசம் செய்யும் மனப்பான்மை கொள்ளாமல் உதட்டளவிலேயே உறவாடியது. இந்திய வம்சாவளியினர் வெளியேற்றப்பட வேண்டும் என்ற கொள்கையை 1971 இல் வெளிப்படுத்திய ஜே.வி.பி. 1977 ஆம் ஆண்டுப் பிரகடனத்தில் தோட்டத் தொழிலாளர் வர்க்கம் இந்தியாவுக்குத் தன்னிச்சையாகத் திரும்பிப் போவதற்கோ, அன்றில் இலங்கையின் பிரஜைகளாவதற்கோ விண்ணப்பன்தர முடியும் என்று, அவர்களுக்கு நல்ல வதிவிடங்கள் தரப்படும் என்று ஏற்றுக் கொண்டது. இந்தக் கொள்கைகளுக்கு மாறாக 1983 கலவரத்தில் இந்திய தொழிலாளர்களை வெளியேற்றும் மனோபாவத்தில் அவர்கள் தாக்கப்பட்டாலும், 1986 வரை தங்களை தீவிரக் கடும்போக்காளராக அடையாளப்படுத்தாது, பின் பழைய சித்தாந்தங்களே அவர்களைப் பற்றி மரமேறியது. அதேபோல 1983 கலவரங்களுக்கு பிறகு விஜயவீரவின் கருத்துக்களில் தாங்கள் தமிழர்களின் உரிமைப் போராட்டத்தை எதிர்ப்பது அவர்கள் தங்களுக்கு எனப் பிரத்தியேக காணிகளும், அவற்றுக்கான அதிகாரங்களையும் கோருவதுதான் காரணம் என்றார். பின்னர், நாட்டைப் பிரிக்க வேண்டும் என்ற ஆயுதக் கிளர்சிக்காரர்களின் கூச்சல்கள் ஏற்றுக் கொள்ள முடியாதவை என்றார். இந்திராவின் அனுசரணையோடு தூதுவர் பார்த்தசாரதி, ஜே.ஆரோடு நடத்திய பேச்சுவார்த்தைகளில் அவர் தமிழ் மக்களது சுயாட்சிக்காக மாகாண சபைகளை பிரேரித்த போது ஜே.வி.பி. அத்தருணமே அதனை எதிர்த்தது. அவர்களது அறிக்கையில் வட,கிழக்குப் பகுதிகளில் நாட்டின் சனத்தொகையில் 11 வீதமான மக்களே குடிகொண்டுள்ளனர். ஆனால் அது நாட்டின் முப்பது வீதப் பரப்பளவைக் கொண்டுள்ளது. அந்தப் பரப்பளவில் 58 வீதமான காணிகள் பிரயோசனப் படுத்தக் கூடியவை. 60 வீதம் கடலை அடுத்தவை. 54 வீதம் மீன் வளங்கள் கொண்டவை. நாட்டில் உள்ள பத்து முக்கிய மீன்பிடி துறைமுகங்களில் ஐந்து அந்தப் பரப்புகளில் அடங்குகின்றன. ஆகவே இந்த நிலையில் வடகிழக்கில் மாகாண சபைகள் அமைப்பது மற்றைய எண்பது வீத மக்களைப் பாதிப்புறச் செய்யும் என்று கூறி அதனை எதிர்த்தார்கள். இந்தியா இந்தத் திட்டத்தை முன்மொழிந்ததால் இந்தியாவுக்கு எதிரான அவர்களது போக்கு தளர் நிலையில் இருந்து கடும்போக்காக மாறியது. அவர்களது இந்திய வியூகத்தை



இன்னுமொரு பாகத்தில் தனியாக ஆராயலாம். அதில் இன்றைய நட்பின் விதைகளையும் காணலாம்.

அரசாங்கத்தைக் கைப்பற்ற ஆயுதப் போராட்டத்தை நம்பி வளர்த்து, அதேசமயம் மக்களை கவருவதற்காக சந்தர்ப்பவாத கொள்கைகளை வகுத்த ஜே.வி.பியின் தன்மைகளைப் பார்த்த அரசியல் ஆராய்வாளர்கள் 1984 – 1986 காலங்களில் அவர்கள் திரிசங்கு நிலையிலேயே கொள்கை அளவில் இருந்தனர் எனக் கணித்தார்கள். முதலாளித்துவ பொருளாதாரத்திற்கு எதிர்ப்பாளர்கள் என்பதைத் தவிர, ஜே.வி.பி. பொதுவெளியில் தெரிவிக்கும் எந்த கொள்கைகளிலும் நம்பிக்கை கொள்ள முடியாது, அனேகமாக இரண்டு, மூன்று முரணான கருத்தியல்புகளை ஒரு விடயத்தில் அவர்கள் வைத்திருந்தார்கள். ஒன்று – அவர்களுடைய பின்னர் நடைமுறைக்கு வருவதற்கானது. மற்றது – மக்களைக் கவர்ந்து ஆதரவு தேடுவதற்கானது. அவர்களே ஒரு நேரத்தில் அவர்களது 1986 – 1987 காலங்களில் இந்தியாவுக்கு எதிரான வன்மையான கருத்துக்களை பரப்பினார்கள். அதேசமயம் பிரத்தியேகமான முறையில் தமிழீழ விடுதலைப் போராளிகளின் கோரிக்கைகளுக்கு எதிராக இந்தியா தங்களுக்கு உதவும், உதவ வேண்டும் என்ற தொடர்புகளை வளர்த்தார்கள். தமிழ் மக்களுக்கு ஓரளவான அதிகாரப் பரவலை ஜே.வி.பி. எதிர்காது என்ற கருத்துக்களை முன்வைத்தனர். அதேசமயம் அவர்களது கோரிக்கைகளை சிங்கள அரசின் கைகளில் உள்ள எல்லா அதிகாரங்களையும் பாவித்து முறியடிப்போம் எனக் கொக்கரித்தனர். அந்த கொக்கரிப்புகள் அவர்களது பேரினவாதத்திற்கு முத்தாய்ப்பு வைத்தது.

ஆனாலும் 1983 கலவர காலங்களில் தமிழர் பிரச்சினைகளைப் பற்றி சிறிது சிறிதாக வெளியிடப்பட்ட அறிக்கைகளில் இருந்த பல கதைகள் எல்லாவற்றையும் விளக்குவதாக 'தமிழீழக் கோரிக்கைக்கான தீர்வுகள்' என்ற தலைப்பில் 1986 இல் பதிக்கப்பட்ட நூலில் "தமிழ் மக்களுக்கு அவர்க

தொடர்ச்சி▼

# திசைகாட்டியின் திரிசங்கு நிலை; அந்தக் கட்சியின் கொள்கையா? அன்றி அரசியல் சந்தர்ப்பவாதமா?

தொடர்ச்சி▲

ளின் மொழி, கல்வி, மதம் என்பவற்றில் ஏற்றுக் கொள்ளத்தக்க குறைபாடுகள், மனக்குறைகள், மனதாக்கங்கள் இருக்கின்றன என்பது வெளிப் படையாக ஏற்றுக் கொள்ளப்பட வேண்டும். அப்படியே தமிழ் தோட்டத் தொழிலாளர்கள்தான் நாட்டின் மிக ஒடுக்கப்பட்ட மக்கள். அவர்கள் தங்கள் உழைப்பின் வியர்வையை இலங்கையின் பல சந்ததிகளாக சிந்தி உள்ளார்கள். ஆனால் அவர்களுக்கு ஒரு



நாடில்லை. குடியுரிமை இல்லை. வீடு என்று ஒன்று கிடையாது. தேயிலைத் தோட்டங்களின் வரிசைக் குடியிருப்பு வாரியங்களிலேயே வாழ்கிறார்கள். இவர்கள்தான் எம்மிடையே அதிகமாக சுரண்டப் படும் மக்கள்." – என விஜயவீர குறித்தார். அதே சமயம் அந்த நூலில் ஆயுதம் தாங்கப் போரா டிய தமிழ் மக்களை பலமாகச் சாடி, அவர்கள் சோழனின் புலிச் சின்னத்தை தாங்கி, சோழனின் கனவுகளில் முன்னைய நாள்கள் போல நாட்டை படையெடுப்பினால் ஆக்கிரமிக்கப் பார்க்கிறார்கள் எனப் பதிந்தார்.

எனினும் நவம்பர் 1983இல். அவர்களினால் இலங்கையில் எல்லா இன மக்களுக்கும் சம உரிமை ஏற்றுக் கொள்ளப்படும், ஒவ்வொரு மொழிக்கும் சம உரிமை தரப்படும், எவ்வித அடிப்படையிலும் காணி களில் பிரத்தியேக உரிமைகள் தரப்பட மாட்டாது, ஒவ்வொரு இனத்தின் கலாசார விழுமியங்களும் பாதுகாக்கப்படும் என்ற அறிக்கைகளும் தரப்பட்டன. இப்பொழுது போலவே, அந்த அறிக்கைகள் எப்படி அரசு அதிகாரங்கள் பகிரப்படும் என்றோ, மொழி கள், மதங்கள், கலாசாரங்களின் சமத்துவம் எப்படிப் பேணப்படும் எனவோ குறிப்பிடவில்லை. லயனல் போபகேயும் குழுவினரும் ஏற்றுக்கொண்ட – இனப் பிரச்சினை ஒன்று இருப்பதை – அந்த அறிக்கை மறுக்கவில்லை. ஆனால் அரச பயங்கரவாதத்தில் தமிழினம் அடக்கு முறைகளுக்கு ஆளாக்கப்படு கிறது என்று ஏற்றுக் கொள்ளாது மௌனம் காத்து, அவை ஏகாதிபத்தியவாதிகளது முன்னெடுப்பு களாலும் இனத்துவேச சிந்தனைகளாலும் எழு கின்றன எனக் குறிப்பிட்டது.

இவற்றுக்கும் அவர்களது 1987 ஆம் ஆண்டின் ஒப்பந்தம் பற்றிய நிலையைக் கவனித்தால் எவை அவற்றில் உண்மையான கொள்கைகள், எவை கவர்ச்சிகளுக்காக விற்கப்பட்டன என்பது புரியும்.


நேற்றைய ஊடகப் பதிப்புகளில் வடக்கு மாகா ணத்தில் மருதங்கேணி முதல் முள்ளிவாய்க்கால் வரை யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களில் பெரும்பாலான கடற்கரைப் பிர தேசங்களை அண்டி, 5,940 ஏக்கர் நிலம் அரச உடமையாக்கப்படுவதற்கான வர்த்தமானி அறி வித்தல் ஒன்று காணி ஆணையாளர் நாயகத்தால் சத்தம்சந்தடி இல்லாமல் வெளியிடப்பட்டுள்ளது, இந்தக் காணிப்பரப்புக்களில் எவை தனியார் நிலம், எது அரசாங்கக் காணி என்று தெரியாததாலேயே குத்து மதிப்பாக அவ்வளவு ஏக்கர் காணிகளும் உடமையாக்கப்படுகின்றன என விளக்கங்கள் தரப்படுவது பற்றிய செய்திகள் வெளியாகின. சில நாள்களுக்கு முன் இதே பாணியில் படங்களை வைத்து மாத்திரம் எல்லையிட்டு வனப் பாது காப்பு ஆணையத்தால் கையகப்படுத்தப்பட்ட சில பகுதிகள், பிழையாக சேர்க்கப்பட்டமையால் விடுவிக்கப்படும் என்று அறிக்கைகளும் வந்தன. பலாலி வீதியும் பலத்த கட்டுப்பாடுகளுக்கு இடையே மக்கள் பாவனைக்குத் திறந்து விடப்பட்டது. இந்த காணிகளின் உரிமையாளர்கள் பலர் அகதிகளாக வெளிநாட்டிலும் இடம்பெயர்ந்து உள்நாட்டிலும் வாழ்கிறார்கள். பலர் இறந்துவிட்ட நிலையில் அவர்களது சிறார்கள் பராமரிப்பில் இருக்கிறார்கள். எவருடனும் – முக்கியமாக இந்த மக்களுடன் – எது வித கலந்தாலோசனைகளும் இன்றி, சத்தம் சந்தடியில்லாமல், அறிக்கை வெளியாகுகின்றது.

இப்படியான சூழலில் நம்பிக்கை எங்கே, எப்ப டித் துளிர்விடும்?



தேர்தல் காலங்களில் பேசுவது போல் நிறைந்த மக்கள் திரளிடையே – அவர்களில் பெரும்பாலான சிங்களவர்கள் இடையே –,மே தினத்தில் பேசிய ஜனாதிபதி அநுர குமார திஸநாயக்க வழமை போல் நல்லெண்ணம், சம உரிமை, சமதர்மம் என்பன எல்லோருக்கும் இருக்க வேண்டும், தங்களில் நம்பிக்கை வைக்கும் தமிழர்களுக்கு இவற்றைத் தருவோம், இனவாதம் மீண்டும் நாட்டில் தலை தூக்க விடமாட்டோம் என்றார். முன்னைய ஜனாதி பதிகளிலிருந்து வேறுபட்ட பேச்சு. ஆனால் அந்த மக்களிடம், நாங்கள் வாக்குறுதி அளித்தபடி தமிழ் மக்களுக்கு அரசமைப்புச் சட்டத்தில் உள்ள 13 ஆம் திருத்தத்தை அமுல்படுத்தப் போகின்றோம், அது நியாயமானது, அதற்கு உங்களது ஆதரவு இருக்கும் என்ற நம்பிக்கை உண்டு என்ற திராணியில் அவர் எதுவும் பேசவில்லை.

(தொடரும்)




# உலக ஊடக சுதந்திர தினம் இன்று

ஊடகங்கள் என்று வரும் போது, வழக்கமான பத்திரிகைகள், தொலைக்காட்சிகள், வானொலிகள் போன்ற பெருந்திரள் ஊடங்களைத் தாண்டி, இணையத்தில் காணப்படும் செய்தித் தளங்களும் சமூக ஊடகங்களில் பகிரப்படும் தகவல்களும் கூட, ஊடகங்கள் என்ற வகைக்குள்ளேயே அடங்குகின்றன.

இதனாலேயே இந்திய அரசினால் காஷ்மீர் பிரச்சினையை தொடர்ந்து பல யூடியூப் தளங்கள் முடக்கப்பட்டன. இதேபோல் கடந்த உயிர்த்த ஞாயிறு தாக்குதல் மற்றும் கோத்தா... கோ... கம... போல கண்டி அசம்பாவிதத்தினை தொடர்ந்து சமூக வலைத்தளங்கள் இலங்கையில் முடக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

இந்த ஊடகங்களால் கட்டியெழுப்பப்படும் ஆரோக்கியமான சூழலே, ஆரோக்கியமான ஜனநாயகத்தையும் ஆரோக்கியமான சமூகங்களையும் கட்டியெழுப்ப முடியும். ஆனால், இன்றைய காலகட்டத்தில், "உலகத்திலும் சரி, இலங்கையிலும் சரி, ஆரோக்கியமான ஊடகச் சூழல் நிலவுகிறதா என்ற கேள்வி?", முக்கியமாக எழுப்பப்பட வேண்டிய ஒன்றாக இருக்கிறது.

ஒவ்வோர் ஆண்டும் மே 3ஆம் திகதி அனுஷ்டிக்கப்படும் இத்தினம், இவ்வாண்டும் வந்து போயிருக்கிறது. மகளிர் தினம், சிறுவர் தினம், போல, இதுவும் ஒரு தினம்.

ஜனநாயகத்தின் 4 பிரதான தூண்கள் என்று சொல்லப்படுபவற்றில், நிறைவேற்று அதிகாரம், சட்டவாக்கம், நீதித்துறை, ஊடகங்கள் என, 4ஆவது இடத்திலேயே ஊடகங்கள் வருகின்ற போதிலும், அதற்கு மேலுள்ள 3 தூண்களும் சரியாகச் செயற்படுகின்றனவா என்பதைக் கண்காணித்து, மக்களுக்கு அறிவிக்கும் முக்கியமான பொறுப்பு, ஊடகங்களுக்கு உண்டு.

எல்லைகளற்ற ஊடகவியலாளர்கள் அமைப்பினால் 2025இல் வெளியிடப்பட்ட ஊடகச் சுதந்திரச் சுட்டி, இணையத்தளத்தில் தந்து கருத்தினை பத்திரிகையாளர்களுக்கு எதிரான உடல் ரீதியான தாக்குதல்கள் பத்திரிகை சுதந்திரத்தின் மிகவும் வெளிப்படையான மீறல்களாக இருந்தாலும், பொருளாதார அழுத்தமும் ஒரு பெரிய, மிகவும் நயவஞ்சகமான பிரச்சுனையாகும். சுளுகு உலக பத்திரிகை சுதந்திர குறியீட்டில் பொருளாதார குறிகாட்டியானது 2025 இல் அதன் சரிவு தொடர்ந்ததால் இப்போது மிகவும் குறைந்த மட்டத்தில் உள்ளது. இதன் விளைவாக, குறியீட்டின் வரலாற்றில் முதல் முறையாக உலகளாவிய பத்திரிகை சுதந்திர நிலை இப்போது "கடினமான சூழ்நிலை" என வகைப்படுத்தப்பட்டுள்ளது.

ஐக்கிய அமெரிக்காவில் ஏற்பட்டுள்ள ஆட்சி மாற்றத்தைத் தொடர்ந்து, உலகம் முழுவதிலும், ஊடகச் சுதந்திரமென்பது ஆபத்துக்கு உள்ளாகியுள்ளதாக, அதன்போது குறிப்பிடப்பட்டது.

பத்திரிகை சுதந்திரம் உள்ள உலக நாடுகளின் தரப்படுத்தல் வரிசையில் இலங்கை முன்னேற்றம் கண்டுள்ளது.

இந்த ஆண்டு வெளியிடப்பட்ட அறிக்கையில் இலங்கைக்கு 139ஆம் இடம் கிடைக்கப் பெற்றுள்ளது. இது கடந்த நல்லாட்சியில் கிடைத்த 135 ஆம் இடத்தில் இருந்து இலங்கைக்கு பின் சென்றுள்ளது.

உலக ஊடக சுதந்திர சுட்டி அறிக்கையின் படி, ஊடக சுதந்திரம் உச்ச அளவில் உள்ள முதலாவது 01 நாடாக நோர்வே தெரிவாகியுள்ளது. கனடா 21லும் இஸ்ரேல் 112 வது இடத்திலும் உள்ளன. இந்தியாவுக்கு 151 ஆவது இடம் வழங்கப்பட்டுள்ளது. கடைசி மூன்று இடங்களும் 178 சீனா - 179 வட கொரியா மற்றும் 180 ஆவது இடத்துக்கு எரித்திரியா தெரிவாகியுள்ளது.


மேற்கத்தேய நாடுகள், தங்களை முன்னிலை படுத்துவதற்கான தகவலே இதுவென, இலகுவாக




கூறி விட்டுக் கடந்து போக முடியும். இலங்கையை விட உக்ரேன்-62, நேபாளம்-90, பிரேஸில்-63, மத்திய ஆபிரிக்கக் குடியரசு-72, மாலி-119, மாலைதீவுகள்-35, பிலிப்பைன்ஸ்-116, சிம்பாப்வே-106,மியான்மர், வெனிசுவேலா போன்ற,

தொடர்ச்சி ▼

# உலக ஊடக சுதந்திர தினம் இன்று




தொடர்ச்சி▲

உள்நாட்டுப் போர் அல்லது உள்நாட்டுக் குழப்பங்கள் நிலவும் நாடுகள், சிறப்பான ஊடகச் சுதந்திரத்தை கொண்டுள்ளன என்பது, இங்குள்ள நிலைமையை இலகுவாக வெளிக்காட்டுகிறது.

ஊடகங்களுக்கு ஓரளவு சுதந்திரத்தை வழங்கக்கூடியது எனக் கருதப்படும் இந்த அரசாங்கம் வருவதற்கு முன்பாக, இலங்கையில் நிலைமை, 165ஆவது இடத்தில் காணப்பட்டது. எனவே, இந்த முன்னேற்றமென்பது முக்கியமானது என்ற போதிலும், 2015ஆம் ஆண்டிலிருந்து 2016ஆம் ஆண்டில் 24 இடங்கள் முன்னேறிய இலங்கை, 2016இலிருந்து 2017க்கு, எந்தவித முன்னேற்றத்தையும் வெளிப்படுத்தவில்லை எனினும் 2018 முதல் -2022ல் சற்று முன்னேற்றம் உள்ளது.

உலகின் பல நாடுகளிலே சமூக உறுதிப்பாட்டையும் விட பத்திரிகைச் சுதந்திரம் கூடுதல் முக்கியத்துவம் வாய்ந்ததாக நோக்கப்படுகிறது. பத்திரிகைகளின் பணி மிகவும் பொறுப்பு வாய்ந்ததாகும். ஏனென்றால், கோடான கோடி மக்களை சென்றடையக் கூடியவையாக இருப்பதால் பத்திரிகைகள் உண்மை நிலையை உருமாற்றம் செய்யக்கூடிய சக்தி கொண்டவையாக விளங்குகின்றன.

1991 ஆம்ஆண்டு நடைபெற்ற ஐக்கிய நாடுகள் கல்வி, விஞ்ஞான, கலாசார நிறுவனத்தின் (யுனெஸ்கோ) பொதுமகாநாட்டின் 26 ஆவது கூட்டத்தொடரில் செய்யப்பட்ட விதப்புரையைத் தொடர்ந்து வருடந்தோறும் மே 3 ஆதேதியை உலக பத்திரிகைச் சுதந்திர தினமாக அனுஷ்டிக்க




கோரும் பிரகடனத்தை 1993 டிசம்பரில் ஐக்கிய நாடுகள் பொதுச்சபை நிறைவேற்றியது.

1991 ஆம் ஆண்டு ஏப்ரில் 29மே 3 வரை நமீபியாவின் வின்டோக் நகரில் ”சுதந்திரமானதும் பன்முகத்தன்மை கொண்டதுமான ஆபிரிக்கப் பத்திரிகைஉலகை மேம்படுத்தல்““ என்ற தலைப்பில் நடைபெற்ற கருத்தரங்கொன்று ஆபிரிக்கப் பத்திரிகையாளர்களினால் முன்வைக்கப்பட்ட சுதந்திரப்பத்திரிகைக் கோட்பாட்டுப் பிரகடனத்தின் வருடாந்த தினமாகவும் மே 3 ஆம்திகதி அமைந்திருக்கிறது.

இந்த பிரகடனம் பின்னர் யூனெஸ்கோ பொது மகாநாட்டினால் அங்கீகரிக்கப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது. தேசங்கள் மத்தியில் செம்மையானதும் சமநிலையானதுமான செய்திகளின் சுதந்திரமான பரிமாற்றத்தையும் உலகின் சகல பாகங்களிலும்இருந்து வருகின்ற தகவல்களின் சரியான தன்மையையும் நேர்மையையும் அறிந்து கொள்வதற்கான மக்களின் உரிமையையும் மேம்படுத்துவது இத்தொனப்பொருளின் நோக்கமாகும்.

சுதந்திரமாக கருத்துகளை வெளிப்படுத்துவதற்கும் சுதந்திரமாகப்பத்திரிகைகளை வெளியிடுவதற்கும் செய்திகளைச் சதந்திரமாகஅடைவதற்கும் உலகிற்கு வாய்க்கப்பெற்ற ஒரு உரிமையைப் பாதுகாப்பதற்காகத் தங்களது உயிர்களைத் தியாகஞ்செய்தவர்களையும்சிறையில் அடைக்கப்பட்டுக் கொடுமைக்குள்ளாக்கப்படுபவர்களையும் நினைவுகூருவதற்கான சிறந்த ஒரு தருணமாக இன்றைய தினம் அமைகிறது.

அரசாங்கம் உகந்தமுறையில் செயற்படுவதற்குச் சுதந்திரமானதும்நெறிமுறை வழுவாததுமான பத்திரிகைகள் அத்தியாவசியமானவை ஆகும். மக்களுக்கு அறிவூட்டுவதில் பத்திரிகைகளின் பங்கு அலட்சியம் செய்யப்பட முடியாததாகும். தற்போதைய நிலைவரங்களையும் நிகழ்வுப்போக்குகளையும் மக்களுக்கு அறியத் தந்து கொண்டிருப்பதில் பத்திரிகைகள் முக்கியத்துவம் வாய்ந்த பாத்திரத்தை வகிக்கின்றன.

பத்திரிகைச் சுதந்திரம் என்பது அதற்கான வரையறைகளையும் கொண்ட ஓர் அடிப்படை உரிமையாகும். பத்திரிகைத் துறையில் பணியாற்றுபவர்கள. உண்மைகளை மாத்திரமே பரப்ப வேண்டுமென்று எதிர்பார்க்கப்படுகறது. சுதந்திரமானதும் வெளிப்படையானதுமான பத்திரிகைத் துறையின் பெயரில் துணிச்சலுடன் செயற்பட்டுத் தங்களை அர்ப்பணம் செய்தவர்களின் வரலாற்றின் மூலம் எம்மால் தெளிவாக உணரக்கூடியது ஒரே யொரு உண்மையாகும்.

ஒடுக்குமுறையாளர்கள் முதலில் ஒழித்துக் கட்டுவது உண்மையைக் கூறுகின்ற பத்திரிகைகளையேயாகும். பத்திரிகைச் சுதந்திரமும் கருத்து வெளிப்பாட்டு சுதந்திரமும் உண்மையான ஜனநாயக சமுதாயங்களில் வாழுகின்ற ஊடகவியலாளர்களையும் பத்திரிகைச் சுதந்திரம் என்பது இன்னமும் ஒரு கனவாகவே இருக்கின்ற சமுதாயங்களில் வாழுகின்றவர்களையும் இணைக்கின்ற ஓர் உயிர்ப்பாதையாகும்.

அதன் காரணத்தினால்தான் இன்று உலகின் எந்தவொரு மூலையிலும் கருத்துவெளிப்பாட்டுச் சுதந்திரத்துக்கு அச்சுறுத்தலாக அமையக் கூடியதாக ஊடகவியலாளர்களுக்கு இழைக்கப்படுகின்ற கொடுமைகளுக்கு எதிராக சர்வதேச ரீதியில் குரல்கள் பலமாக ஒலித்து ஒருமைப்பாட்டுணர்வு வெளிப்படுத்தப்படுவதைக் காணக் கூடியதாக இருக்கிறது.

# எதிர்க்கட்சியினருக்கு தேர்தலில் வெல்வதற்கு ஆலோசனைகள் தேவைப்பட்டால் தரத் தயார்!

## இப்படிக் கூறுகின்றார் ஆளும் தரப்பின் ஜெகதீஸ்வரன் எம்.பி.

(கி.வசந்தன்)




எதிர்க்கட்சியினர் தேர்தலில் எவ்வாறான யுக்திகளை பயன்படுத்த வேண்டும் என்று வெல்வதற்கு தேவையான ஆலோசனைகள் தேவைப்பட்டால் வழங்க தயார் என தேசிய மக்கள் சக்தியின் வன்னி மாவட்ட நாடாளு மன்ற உறுப்பினர் ம. ஜெகதீஸ்வரன் தெரிவித்தார்.

வவுனியாவில் நேற்று இடம்பெற்ற ஊடக சந்திப்பின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

தொடரந்தும் கருத்து தெரிவித்த அவர்,

மேதினத்திற்கு காலி முகத்திடலில் திரண்டவர்களை பார்க்கின்ற போது தேசிய மக்கள் சக்தியை மக்கள் விரும்புகின்றார்கள். அது அபிமானம் மிக்க கட்சியாக மக்கள் மத்தியில் காணப்படுகின்றது என்பது தெளிவாகின்றது.

இந்த நிலையில் வடமாகாணத்திலும் தேசிய மக்கள் சக்தியின் வெற்றி உறுதிப்படுத்தப்பட்டு இருக்கின்றது. இதற்குக் காரணம் என்னவென்றால் எதிர்க்கட்சிகள் தேசிய மக்கள் சக்திக்கு சேறு பூசும் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளமையே காணப்படுகின்றது.

உண்மையில் அவர்கள் இவ்வாறான செயற்பாட்டை மாற்றி இதுவரை காலமும் என்ன செய்தார்கள், இனி என்ன செய்யப் போகின்றார்கள் என்பதனை கூறுவார்களாக இருந்தால் அது ஆக்க பூர்வமானதாக இருக்கும். அது அவர்கள் வெற்றி பெறுவதற்கான வாய்ப்பாகக் கூட இருக்கலாம்.

எனவே அவர்கள் தேர்தல் யுக்திகளை மாற்றி அமைப்பதுதான் சிறப்பு. எனவே அவர்கள் எதிர்வரும் தேர்தல்களிலாவது தேர்தல் யுக்திகளை மாற்றி வெற்றி பெறுவதற்கு முயற்சிக்கலாம்.

தேவை ஏற்பட்டால் எதிர்க்கட்சியி– னர் தேர்தலில் எப்படி யுக்திகளை பயன்படுத்த வேண்டும், எவ்வாறு ஆக்க பூர்வமான செயற்பாட்டை முன்னெடுக்கலாம் என்பது தொடர்பான ஆலோசனைகளை தேவைப்பட்டால் அதனை வழங்குவதற்கு நான் தயாராகவே இருக்கின்றேன். – எனத் தெரிவித்தார்.

# ஆக்கிரமிப்பைத் தடுத்து, அபிவிருத்தியை முன்னெடுக்க தமிழ் மக்கள் சங்குக்கு தவறாது வாக்களிக்க வேண்டும்

## ஜனநாயகத் தமிழ் தேசியக் கூட்டணியின் சுரேன் கோரிக்கை



எதிர்வரும் உள்ளூராட்சி சபை தேர்தலில் தமிழ் மக்கள் ஒன்றிணைந்து எம்மிடம் ஆட்சியை கையளியுங்கள். எந்தவித ஆக்கிரமிப்புகளையும் தடுத்து நிறுத்துவதோடு நிலையான அபிவிருத்தியையும் முன்னெடுப்போம்.

– ஜனநாயகத் தமிழ் தேசியக் கூட்டணியின் (சங்குச் சின்னம்) வட மாகாணம் தேசிய அமைப்பாளர் கு.சுரேந்திரன் கோரியுள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:–

கடந்த உள்ளூராட்சி சபை ஆட்சி காலத்தில் பல ஆக்கிரமிப்பு நடவடிக்கைகளை எமது தவிசாளர்கள் தடுத்து நிறுத்தி உள்ளார்கள். உதாரணமாக வலி கிழக்கிலே நிலாவரையில் முன்னெடுக்கப்பட்ட புத்தர் சிலை நிறுவுதலோடு, அதன் பின் காணி அவகரிக்கும் செயல்பாடுகளையும் எமது சபையினூடாக தடுத்து நிறுத்தினோம். சகலவிதமான சட்ட சிக்கல்களுக்கு முகம் கொடுத்தோம். ஆனால் பேரினவாதத்தின் ஆக்கிரமிப்பு நடவடிக்கைகளை முறியடித்துள்ளோம்.

அதேபோன்று இந்த முறையும் உள்ளூராட்சி சபைகளை எமது கைகளுக்கு தாருங்கள். பாதுகாப்பு படையினர், வன வளத்துறையினர், வன விலங்கு பாதுகாப்பு பிரிவினர், மகாவலி அபிவிருத்தி திணைக்களம், பௌத்த சாசன அமைச்சு என பல கட்டமைக்கப்பட்ட ஆக்கிரமிப்பு நடவடிக்கைகளில் இருந்து நமது பிரதேசங்களை காப்பதற்கு இந்த அதிகாரங்களை தமிழ் மக்கள் எம்மிடம் கையளியுங்கள்.

எதற்கும் துணிந்து நின்று போராடக்கூடிய இளைஞர்கள் பலர் எமது கட்சியினூடாக தேர்தலில் அணிவகுத்துள்ளனர். இந்த சந்தர்ப்பத்தில் எமது மக்கள் நன்கு சிந்தித்து உள்ளூராட்சி சபைகளின் ஆட்சியை எமக்கு வழங்குவதன் மூலம் எமது மக்களின் இருப்பை தக்க வைப்பதோடு நிலைபேறான அபிவிருத்தியையும் நாங்கள் முன்னெடுப்போம்.

ஆகவே இருமுனையில் நமது அதிகாரங்களை பயன்படுத்தி எமது மக்களின் அபிவிருத்தியையும் இருப்பையம் உறுதி செய்வோம். இதற்கு தமிழ் மக்கள் உங்களது பரிபூரண ஆதரவை எமக்கு வழங்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறோம். – என்று உள்ளது.

## உள்ளூராட்சி சபை
## தேர்தல் களம்



# தேசிய மக்கள் சக்தி இத்தேர்தலில் பாரிய பின்னடைவைச் சந்திக்கும்!

### றிசாட் எம்.பி. வவுனியாவில் தெரிவிப்பு

**(கி.வசந்தன்)**

தேசிய மக்கள் சக்தி இந்தத் தேர்தலில் பாரிய பின்னடைவைச் சந்திக்கும் என ஐக்கிய மக்கள் சக்தியின் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும், அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் தலைவருமான றிசாட் பதியுதீன் தெரிவித்தார்.

வவுனியா, சூடுவெந்தபுலவு கிராமத்தில் நேற்று முன்தினன் இரவு இடம்பெற்ற தேர்தல் பிரச்சாரக் கூட்டத்தில் கருத்து தெரிவித்த போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார். அவர் மேலும் தெரிவிக்கையில் –

கடந்த இரு தசாப்தங்களாக தமிழ், முஸ்லிம், சிங்கள மக்களுக்கு இந்தப் பகுதியில் ஆற்றிய பணிகளுக்கு நன்றிக் கடன் தெரிவிக்கும் தேர்தலாக இந்த தேர்தலைப் பார்ப்பார்கள். தேசிய மக்கள் சக்தி மக்களை ஏமாற்றுகிறார்கள். கடந்த ஜனாதிபதி தேர்தலில் மக்கள் அதிகளவிலான வாக்குகளை வழங்கினார்கள். அதேபோல் கடந்த நாடாளுமனற தேர்தலில் வடக்கு – கிழக்கு பகுதி மக்களும், தென்பகுதி மக்களும் அதிக வாக்குகளை வழங்கினார்கள்.

ஆனால், கடந்த 6 மாத காலப் பகுதியில் அவர்களது செயற்பாடுகள் சொன்னதிற்கு நேர்மாறாக இருக்கின்றன. இந்தத் தேர்தலில் பெரிய பின்னடைவை அவர்கள் அடைவார்கள்.

எமது கட்சி நாடாளுமன்றத் தேர்தலை விட இம்முறை அதிக வாக்குகளைப் பெறும். கடந்த முறை வன்னியில் நான்கு சபைகளை கைபற்றி ஆட்சி அமைத்தோம். இம்முறை அதிக சபைகளை கைப்பற்றுவோம் என்ற நம்பிக்கை இருக்கிறது. – எனத் தெரிவித்தார்.













## உள்ளூராட்சி சபை
## தேர்தல் களம்



# தமிழ் இனத்தின் எதிர்காலத்திற்கான தேர்தலாக இதைப் பார்க்கவேண்டும்

### பெரியகல்லாறு கூட்டத்தில் சாணக்கியன் எடுத்துரைப்பு

**(வாலகிருஸ்ணா)**

இந்தத் தேர்தலை யாரும் ஒரு வட்டாரத்திற்கான தேர்தலாகப் பார்க்கக் கூடாது. இந்தத் தேர்தல் ஒட்டுமொத்த தமிழினத்தின் எதிர்காலத்திற்கான தேர்தலாக பார்க்கவேண்டும் என இலங்கைத் தமிழரசுக்கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் இரா.சாணக்கியன் தெரிவித்தார்.

இலங்கைத் தமிழரசுக்கட்சியின் உள்ளூராட்சி சபை தேர்தலில் போட்டியிடும் மண்முனை தென் எருவில் பற்று சபைக்கு உட்பட்ட 10ஆம் வட்டார வேட்பாளர்களுக்கு ஆதரவாக தேர்தல் பிரசாரக்கூட்டம் நடைபெற்றுத.

மண்முனை தென் எருவில் பற்று சபைக்கு உட்பட்ட 10ஆம் வட்டாரமான பெரியகல்லாறு வட்டார வேட்பாளர் சி.பேரின்பராஜா தலைமையில் நடைபெற்ற இந்த கூட்டத்தில் இலங்கை தமிழரசுக்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் இரா.சாணக்கியன் கலந்துகொண்டார்.

இந்த கூட்டத்தில் பெருமளவான மக்கள் கலந்துகொண்டதுடன் சிறப்புரைகளும் இடம் பெற்றன.இதன்போது கருத்து தெரிவித்த சாணக்கியன் எம்.பி. –

2024ஆம் ஆண்டு வரையில் இந்த மண்ணில் தேசிய மக்கள் சக்தி என்ற ஒன்று இருக்கவில்லை. இன்னும் ஒரு வருடத்திற்குள் இந்த தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்தின் கதைமுடியும். நாட்டின் பொருளாதார நிலைமை அவ்வளவு மோசமாக சென்றுகொண்டிருக்கின்றது.

ஜனாதிபதி மற்றும் அமைச்சர்கள் இந்த நாட்டில் அவர்களுக்கு வேறு வேலையில்லாதமை போன்று வடகிழக்கிலேயே சுற்றிக்கொண்டிருக்கின்றார்கள்.

நாங்கள் இந்த நாட்டில் உள்ள தமிழ் மக்களுக்கு அரசியல் தீர்வினை வழங்குவீர்களா என்று கேட்டால் அவர்களிடமிருந்து பதில் வராது. அந்தவேளையில் எங்களை வேறு பிரதேசத்தினைச் சேர்ந்தவர்கள் போன்று பார்ப்பார்கள்.

தமிழ் மக்களின் பிரச்சினைகள் குறித்து பேசுவதற்கு தேசிய மக்கள் சக்தியில் உள்ள தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு அந்த அரசாங்கம் சந்தர்ப்பம் வழங்குவதில்லை. பிமல்

தொடர்ச்சி▼



# உள்ளூராட்சி சபை தேர்தல் களம்

## தமிழ் இனத்தின் எதிர்காலத்திற்கான தேர்தலாக இதைப் பார்க்கவேண்டும்

தொடர்ச்சி▲

ரத்நாயக்கவின் செல்லப்பிள்ளைகளுக்கு மட்டுமே நேரம் ஒதுக்கப்படும்.

தமிழர்களின் பிரச்சினையை தேசிய மக்கள் சக்தியின் அரசாங்கத்தில் உள்ள ஒரு தமிழ் நாடாளுமன்ற உறுப்பினராரலேயே பேசமுடியாது என்றால் எவ்வாறு ஒரு உள்ளூராட்சி மன்ற உறுப்பினரால் முடியும்? தமிழரசுக்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்களால் மட்டுமே அதற்கு முடியும். – எனவும் தெரிவித்தார்.






## யாழ்ப்பாணத்தின் அடையாளத்தை மாற்றுவதற்கு இடமளிக்கமாட்டேன்

### யாழ் மாநகரின் வேட்பாளர் ஈசன் தெரிவிப்பு

யாழ்ப்பாணத்தின் அடையாளத்தை மாற்ற இடமளிக்கமாட்டேன் என ஜனநாயக தமிழ் தேசிய கூட்டமைப்பின் யாழ் மாநகர வேட்பாளர்கள் ஈசன் தெரிவித்துள்ளார்.

யாழ் ஊடக அமையத்தில் நேற்று ஊடக சந்திப்பை முன்னெடுத்திருந்த அவர்ங்கு மேலும் கூறியவை வருமாறு:-

வடக்கு கிழக்கில் பாரிய கட்டமைப்புடன் பயணிக்கும் கட்சியாக எமது கட்சி இருக்கின்றது.

இம்முறை தேர்தல் ஆணையகத்தால் எமது ஜனநாயக உரிமை பறிக்கப்பட்டபோதும் நாம் எமது உரிமையை மீண்டும் சட்டத்தின் ஊடாக பெற்றுக் கொண்டோம்.

ஆதலால் எமக்கு பிரசாரத்துக்கான காலமும் குறைவாகிப் போனது. ஆனாலும் மக்கள் எமது கரங்களைப் பலப்படுத்துவர்கள் என்று நம்புகின்றோம்.

யாழின் அடையாளங்களை சிதைத்து தமிழ் மக்களின் இருப்பையும் வாழிடங்களையும் இல்லாதொழிக்கும் செயற்பாடுகளை இன்றைய அரசு செய்ய முனைகின்றது.

இவர்களது இந்த சூழ்ச்சித்தனமான செயற்பாடுகளுக்கு மக்கள் இடம் கொடுக்கக் கூடாது.

மேலும் தமிழ் தேசிய கூட்டமைப்பு என்ற போர்வையில் கட்டமைக்கப்பட்டிருந்த தமிழரசுக் கட்சிக்குள் இருந்து வரும் குழப்பங்களும் குழிபறிப்புகளுமே தேசிய மக்கள் சக்தியின் வடக்கிற்கான காரணமாகும்.

இவர்களது இந்த போக்கின் காரணமாக அதிருப்தியடைந்த தமிழ் மக்கள் வெளிப்படுத்திய கசப்பான பாடமே கடந்த பொதுத் தேர்தலின் பெறுபேறுகளாக இருந்தது.

இதேநேரம் நகர கட்டுமாண அபிவிருத்தி என்பது யாழ் நகரில் சரியான பொறிமுறை ஒன்றைக் கொண்டிருக்கவில்லை.

இதுவே யாழ் மாநகரின் அபிவிருத்தியின் வீழ்ச்சிக்கும் பின்னணியாகவும் இருக்கின்றது.

தமிழ் அரசியல் பரப்பில் இருக்கும் ஆற்றலுள்ள இளைஞர்களிடம் வழங்குவது அவசியமாகும். – என்றார்.

# இன்றைய ராசி பலன்கள் - 03.05.2025




இன்று உற்சாகத்துடன் காணப்படுவீர்கள்.இன்றைய நாளை நல்ல பலன் பெற பயன்படுத்திக் கொள்ளுங்கள். உங்கள் கடின முயற்சிக்கு நல்ல பலன் கிடைக்கும். நீங்கள் விரைந்து முடிவெடுப்பீர்கள்.

நீங்கள் செய்யும் பணியை விரும்பி செய்வீர்கள். சுய வளர்ச்சி மூலம் பணயில் முன்னேற்றம் காண்பீர்கள். இன்று அதிர்ஷ்டத்தை விட கடின உழைப்பை நம்ப வேண்டும்.

உங்கள் துணையுடன் இன்றைய தினத்தை கொண்டாடி மகிழ்வீர்கள். இனிமையான வார்த்தைகளை பரிமாறிக் கொள்வதன் மூலம் இருவரும் புரிந்துணர்வுடன் இருப்பீர்கள்.

உங்கள் கடின உழைப்பிற்கு ஊக்கத்தொகையாக பண வரவு காணப்படும். நீங்கள் உங்கள் முயற்சியில் நேர்மையாக இருப்பீர்கள்.




இன்று விருப்பமான பலன்கள் கிடைக்காது. தீய விளைவுகளை தவிர்க்க நீங்கள் எந்த விஷயத்தையும் தொடங்குமுன் யோசித்து செயல்பட வேண்டும்.பிறருடன் பேசும்போது கவனமாகப் பேச வேண்டும்.

உங்கள் பணிகளை திறமையாக ஆற்றுவதில் சில தடைகளும் ஏமாற்றங்களும் காணப்படும். உங்கள் சக பணியாளர்களுடனான தொடர்பும் சுமூகமாக இருக்காது.

உங்கள் சக பணியாளர்களுடன் கருத்து வேறுபாடு காணப்படும். அமைதியாக அனுசரித்து நடந்து கொள்ள வேண்டும். உங்கள் துணையுடன் பேசும் போது கவனமாக இருக்க வேண்டும்.

இன்று ஏற்படும் செலவுகளை தவிர்க்க முடியாது. உங்கள் செலவுப் பழக்கத்தை கட்டுப்படுத்த வேண்டும். தேவையற்ற செலவுகள் செய்ய நேரலாம்.




உங்கள் முயற்சிகளுக்கு இடையூறு ஏற்படும் வகையில் இன்று தடைகள் நிறைந்து காணப்படும். விரும்பத்தகாத சூழ்நிலை இருந்த போதிலும் எதையும் எளிதாக எடுத்துக் கொண்டு மகிழ்ச்சியாக இருக்க வேண்டும். நீங்கள் ஒருவிதமான வெறுமையை உணர்வீர்கள். இன்று முக்கிய முடிவுகள் எடுப்பதை தவிர்க்கவும்.

பணியிடச் சூழல் சுமூகமாக இருக்காது. பணிகளை ஆற்றும் போது சில தாமதங்கள் ஏற்படலாம்.

உங்கள் துணையிடம் எரிச்சலை வெளிப்படுத்துவீர்கள். இந்த உணர்வை தவிர்த்து உங்கள் துணையை நகைச்சுவை உணர்வோடு அணுக வேண்டும்.

பண வரவு குறைந்து காணப்படும். அதிக பணம் செலவாகும். நிதி சம்பந்தமாக எடுக்கும் முக்கிய முடிவுகள் எடுக்கக் நல்ல பலனைத் தராது.




இன்று ஆக்கபூர்வமான நாள். நபர்கள் மூலம் ஆதரவும் பலனும் பெறுவீர்கள். இன்று உற்சாகமாக காணப்படுவீர்கள்.

உங்கள் பணியில் முன்னேற்றகரமான பலன்கள் காணப்படும். உங்கள் சக பணியாளர்களின் ஆதரவு கிடைக்கும். உங்கள் செயல்திறனில் திருப்தி அடைவீர்கள்.

உங்கள் துணையுடன் இன்று மகிழ்ச்சியாக இருப்பீர்கள். நல்ல தருணங்களை பரஸ்பரம் பகிர்ந்து கொண்டு புத்துணர்ச்சியோடு காணப்படுவீர்கள். புதிய மனிதர்களை சந்திக்கும் வாய்ப்பு கிடைக்கும்.

இன்று வரவுகள் அதிகமாக காணப்படும். சொத்துக்கள் வாங்குவதற்கு உங்கள் பணத்தை முதலீடு செய்வீர்கள்.

இன்று தேக ஆரோக்கியத்துடன் காணப்படுவீர்கள். ஆற்றலும் உறுதியும் கொண்டு சுறுசுறுப்புடன் காணப்படுவீர்கள்.




இன்று மிதமான பலன்களே காணப்படும்.இன்று பொறுமையாக இருக்க வேண்டும். தியானம் மேற்கொள்வதன் மூலம் எத்தகைய சூழ்நிலையையும் எதிர்கொள்ள முடியும்.

இன்று பணிகள் அதிகமாக காணப்படும். எனவே திட்டமிட்டு அதன்படி பணிகளை ஆற்றினால் வெற்றி காண இயலும்.

உங்கள் துணையுடனான உறவில் அகந்தைப் போக்கு காணப்படும். இந்தப் போக்கை தவிர்க்க வேண்டும். நட்பான அணுகுமுறை மேற்கொள்ள வேண்டும்.

சோம்பல் தனம் காரணமாக இன்று பண இழப்பு நேரலாம். பணத்தை கையாளும்போது கவனம் தேவை.

பதற்றம் காரணமாக இன்று உங்களுக்கு கால் மற்றும் தொடை வலி ஏற்பட வாய்ப்புள்ளது.




இன்று உங்கள் செயல்களில் வெற்றி காண புத்திசாலித் தனத்தை பயன்படுத்த வேண்டும். சூழ்நிலை கட்டுக்கடங்காமல் இருக்கும். எனவே சிந்தித்து செயல்பட வேண்டும்.

இன்று பணியிடத்தில் கவனமின்மை காரணமாக தவறுகள் நேர வாய்ப்புள்ளது. எனவே கவனமாக செயல்பட வேண்டும்.

உங்கள் துணையுடன் குறைந்த அளவு இணக்கம் காணப்படும். தவறான புரிந்துணர்வு காரணமாக கருத்து வேறுபாடு காணப்படும்.

இன்று பெரிய அளவில் பண இழப்பு ஏற்பட வாய்ப்புள்ளது. தேவையற்ற செலவுகள் ஏற்படும் என்பதால் இன்று பணத்தை திட்டமிட்டு செலவு செய்ய வேண்டும்.

இன்று ஒவ்வாமை காரணமாக அஜீரணக் கோளாறு ஏற்பட வாய்ப்புள்ளது.




இன்றைய நாள் மந்தமாக காணப்படும். உங்கள் நம்பிக்கைக்கு உயிர் கொடுங்கள். உங்கள் முயற்சிகளில் வெற்றி பெற நம்பிக்கை முக்கியம்.

உங்கள் பணியில் ஏமாற்றமான சூழ்நிலைகள் காணப்படும். பணியிடச் சூழல் சுமூகமாக இருக்காது. இது உங்களுக்கு வருத்தத்தை அளிக்கும். நீங்கள் பொறுமையை வளர்த்துக் கொள்ள வேண்டும்.

நீங்கள் எந்த விஷயத்தையும் தீவிரமாக எடுத்துக் கொள்வீர்கள். சகஜமான அணுகுமுறை மேற்கொண்டு ஒருவருக்கொருவர் நல்லுறவை வளர்த்துக் கொள்ளுங்கள். உங்கள் துணையிடம் பொறுமையையும் அன்பையும் வளர்க்க வேண்டும்.

தேவையற்ற செலவுகளை எதிர்கொள்ள நேரும்.




இன்று மகிழ்ச்சிகரமான நாளாக இருக்கும். முக்கிய முடிவுகள் எடுப்பது இன்று நன்மை தரும். உற்சாகமான அணுகுமறை மூலம் இன்றைய நாளை சிறப்பாக்கிக் கொள்ளலாம்.

சக பணியாளர்களின் ஆதரவு கிடைக்கும். உங்கள் மேலதிகாரிகளிடமிருந்து எதிர்பாராத அனுகூலங்கள் கிடைக்கும். சாதித்த உணர்வு உங்களிடம் காணப்படும்.

உங்கள் துணையுடன் நகைச்சுவை உணர்வை பகிர்ந்துகொள்வீர்கள். இது நல்ல புரிந்துணர்வு உருவாக வழி வகுக்கும்.

உங்களிடம் இருக்கும் பணம் உங்களுக்கு போதுமானதாக இருக்கும். உங்கள் சேமிப்பையும் உருவாக்க முடியும்.

# இன்றைய ராசி பலன்கள் - 03.05.2025




இன்று சுமூகமான நாளாக இருக்கும். உறுதியான போக்கு உங்களை நல்ல முடிவு எடுக்க வைக்கும். உங்கள் இலக்குகளில் வெற்றி பெறுவீர்கள்.

உங்கள் பணியைப் பொறுத்தவரை இன்று மகிழ்ச்சியான நாள். உங்கள் மேலதிகாரிகளிடமிருந்து பாராட்டு பெறுவீர்கள். புதிய வாய்ப்புகள் பெருகி காணப்படும்.

உங்கள் துணையுடன் இனிமையான வார்த்தைகளை பகிர்ந்து கொள்வீர்கள். இதனால் இருவரிடையே உறவுப் பிணைப்பு அதிகரிக்கும்.

உங்கள் சேமிப்பை அதிகரிக்கும் நிலையில் இருப்பீர்கள். கணிசமான பணம் சம்பாதிக்க அதிர்ஷ்டம் உங்களுக்கு அனுகூலமாக இருக்கும்.

உங்களிடம் காணப்படும் ஆற்றல் காரணமாக இன்று நல்ல ஆரோக்கியம் காணப்படும்.




இன்று நம்பிக்கை மற்றும் தன்னம்பிக்கை இழந்து காணப்படுவீர்கள். நல்ல பலன்களைக் காண நீங்கள் உறுதியுடன் இருக்க வேண்டும். உங்கள் வளர்ச்சியில் மிகுந்த தடைகளை எதிர்கொள்வீர்கள். முக்கிய முடிவுகள் எடுப்பதை தவிர்க்க வேண்டும்.

பணியின் போது தவறுகள் ஏற்பட வாய்ப்புள்ளது. பணிகளை திட்டமிட்டு முறையாக ஆற்ற வேண்டியது முக்கியம்.

உங்கள் துணையுடன் வாக்குவாதத்தில் ஈடுபடுவீர்கள். அத்தகைய போக்கை தவிர்த்து அமைதியாக இருப்பது நல்லது.

இன்று பண இழப்பு காணப்படும். பயணத்தின் போது பண இழப்பிற்கான வாய்ப்பு உள்ளது.




இன்று மன உளைச்சலுக்கு ஆளாவீர்கள். இசையைக் கேட்டதன் மூலம் அமைதி பெறலாம். இது பிரச்சினைகளைக் கையாள உதவும். வாக்குவாதங்களிலிருந்து விலகி இருக்கவும். நட்பான அணுகுமுறை மேற்கொள்ளவும்.

உங்கள் பணியைக் கையாளும் போது கவனம் செலுத்த வேண்டும். இதனால் உங்கள் திறன் அதிகரிக்கும். தவறுகள் ஏற்பட வாய்ப்புள்ளது.

உங்கள் துணையுடன் பேசும்போது நகைச்சுவை உணர்வை வெளிப்படுத்துவீர்கள். கவனமற்ற வார்த்தைகளின் காரணமாக உறவு பாதிக்கும். பேசும்போது கவனம் தேவை.

பண இழப்பிற்கான வாய்ப்பு உள்ளது.




இன்று பல நன்மைகள் நடக்கும். உங்கள் அணுகுமுறையில் நம்பிக்கை காணப்படும். நீங்கள் எடுக்கும் முடிவுகள் நல்ல பலனைத் தரும். சமூகத்தில் புதிய நபர்களின் தொடர்பு கிடைக்கும்.

உங்கள் திறமைகளை தனித்த அணுகுமுறை மூலம் வெளிபடுத்துவீர்கள். இதனால் பணியிடத்தில் உங்கள் செயல்திறன் சிறப்பாக இருக்கும்.

உங்கள் துணையிடம் நட்பான அணுகுமுறை மேற்கொள்வீர்கள். இதனால் இருவருக்குமிடையே நல்லறவு வளரும்.

இன்று நிதிநிலைமை சிறப்பாக இருக்கும். சேமிக்கும் ஆற்றல் அதிகரிக்கும். ஊக்கத்தொகை போன்ற கூடுதல் பண வரவு காணப்படும்.

உங்களிடம் காணப்படும் ஆற்றல் மற்றும் உற்சாகம் காரணமாக உங்கள் ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும்.

# பல்கலைக்கழக அனுமதிக்கான கையேடு நாடெங்கிலும் நேற்று முதல் விநியோகம்!




அண்மையில் வெளியிடப்பட்ட கல்விப் பொதுத் தராதர உயர்தரப் பரீட்சை முடிவுகளின் அடிப்படையில் 2024/2025 கல்வி ஆண்டுக்கான பல்கலைக்கழக மாணவர் அனுமதிக்கான வழிகாட்டல் கையேடு வெளியிடப்பட்டுள்ளது.

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் நேற்று வெள்ளிக்கிழமை வெளியிடப்பட்ட இந்தக் கையேடுகள் நாடெங்கிலுமுள்ள பதிவு செய்யப்பட்ட விநியோகஸ்தர்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

பல்கலைக்கழக அனுமதி விண்ணப்பங்கள் எதிர்வரும் 09 ஆம் திகதி முதல் ஏற்றுக்கொள்ளப்படவிருக்கின்றன. விண்ணப்ப முடிவு தினம் இம்மாதம் 30 ஆம் திகதி எனவும், அனுமதிக்கான வழிகாட்டல் கையேடுகளை இன்று 03ஆம் திகதி சனிக்கிழமை முதல் மாணவர்கள் பெற்றுக்கொள்ள முடியும் எனவும் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு அறிவித்துள்ளது.

2024 ஆம் ஆண்டு உயர்தரப் பரீட்சை முடிவுகளின் படி பல்கலைக்கழக அனுமதிக்குத் தகைமைபெற்ற மாணவர்களில் அரச பல்கலைக்கழக அனுமதிக்கு விண்ணப்பிக்க விரும்புபவர்கள் இல. 20, வாட் பிளேஸ், கொழும்பு 07 எனும் முகவரியில் அமைந்துள்ள பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் செயலகத்தில் அல்லது நாடெங்கிலுமுள்ள பதிவு செய்யப்பட்ட விநியோகஸ்தர்களிடம் கையேட்டுக் கட்டணமாக ஆயிரம் ரூபா செலுத்தி நேரடியாகப் பெற்றுக் கொள்ள முடியும்.

தபால் மூலம் அனுமதிக் கையேட்டைப் பெற்றுக் கொள்ள விரும்புபவர்கள் இலங்கை வங்கி, ரொறிங்டன் கிளையின் 0002323287 என்ற கணக்கிலக்கத்துக்கோ அல்லது மக்கள் வங்கி, நகர மண்டபக் கிளையின் 167-1-001-4-3169407 என்ற கணக்கிலக்கத்துக்கோ விண்ணப்பக் கட்டணமாக ஆயிரம் ரூபா வைப்பிலிட்ட சிட்டையுடன் சுயமாகத் தயாரிக்கப்பட்ட வேண்டுகைக் கடிதத்துடன், சுயமுகவரியிடப்பட்ட தபாலுறையுடன் விண்ணப்பங்களை அனுப்பி வை-க்குமாறும், மேலதிக விவரங்களைப் பெற்றுக் கொள்ள விரும்புபவர்கள் 011-2695301, 011-2695302 ஆகிய தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்பு கொள்ளலாம் எனவும் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு அறிவித்துள்ளது.